# தாம்பத்திய உறவில் நெருக்கம்



சுவிசேஷ அன்பு தாம்பத்திய உறவில் ஏற்படுத்தும் நெருக்கத்தை விளக்கும் நூல்

அலன் டன்

# தாம்பத்திய உறவில் நெருக்கம்

அலன் டன்

சவறின் கிரேஸ் வெளியீடுகள்

# தாம்பத்திய உறவில் நெருக்கம்


Sovereign Grace Publications
P O Box 62 159, Sylvia Park, Auckland, NZ

ஆசிரியர்:
**அலன் டன்**

மொழிபெயர்ப்பு:
**வினோதா சுரேந்தர்**
**ஆர். பாலா**

நூல் வடிவமைப்பு:
M. **ஜேம்ஸ்**

நூல் வடிவமைப்பு விவரங்கள்:
எழுத்து: 12/15 வள்ளுவன்;
நூல்: 5.6" x 8.6"; பக்கங்கள்: 224

முதல் பதிப்பு: செப்டம்பர் 2011, இந்தியா

கிடைக்குமிடம்:
6/87 காமராஜர் தெரு,
திருவள்ளுவர் நகர், அயனாவரம்,
சென்னை 600023, தமிழ்நாடு, இந்தியா.
தொலைப்பேசி: +91 9444347829

Available at:
6/87 Kamarajar Street,
Thiruvalluvar Nagar, Ayanavaram,
Chennai 600023, Tamilnadu, India.
Mobile: +91 9444347829.

# நன்றி!

அக்டோபர் 2003ம் ஆண்டில் திருமணமான தம்பதிகளின் கிறிஸ்தவ மகாநாடொன்றில் நான் பிரசங்கமாக அளித்த போதனைகளின் மூலம் பிறந்ததே இந்த நூல். அந்த மகாநாட்டில் பிரசங்கம் செய்ய எனக்கு சந்தர்ப்பம் அளித்த போல்டிமோர், திரித்துவ சீர்திருத்த பாப்திஸ்து சபைப் போதகர்களான ஸ்டீவ் ஹார்ட்லன்ட், ஸ்டேன் கிரே, மரே வில்சன் ஆகியோருக்கு என்னுடைய நன்றிகளை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நியூ ஜெர்சியைச் சேர்ந்த போதகர் யூஜீன் பினேரோ இந்தப் பிரசங்கங்களை நூல் வடிவில் தயாரித்து வெளியிட என்னை ஊக்கப்படுத்தினார். இந்த விஷயத்தில் எனக்கு ஆலேசனைகள் தந்து ஊக்கமளித்த போதகர் ஸ்டீவ் மெடோஸுக்கும், நூலின் எழுத்து வேலைகளில் துணைபுரிந்த போதகர் ஜெரமி வோக்கருக்கும் என்னுடைய நன்றிகள்.

இந்த நூலைத் தயாரித்து வெளியிடும் பணியில் எனக்காகவும், இதை வாசிக்கப்போகின்ற நீங்கள் இதனால் பலனடைந்து கிறிஸ்து மகிமையடைய வேண்டும் என்று உங்களுக்காகவும் ஊக்கத்தோடு ஜெபித்து வந்திருக்கும் நான் பணிபுரியும் கிருபை உடன்படிக்கை பாப்திஸ்து சபை மக்களுக்கு நான் பெரிதும் கடமைப்பட்டவன்.

என்னுடைய பிள்ளைகளான ஈத்தன், எலியட், ஜெரமி மற்றும் அன்ட்ரியா தொடர்ந்து என்னுடைய இருதயத்தின் மகிழ்ச்சிக்கு காரணமாக இருக்கிறார்கள். அவர்களுடைய தாயோடு நான் நடத்தும் மணவாழ்வு சுவிசேஷமாக அவர்களுடைய வாழ்க்கையில் கடைசி நாட்கள்வரை கிரியை செய்ய வேண்டும் என்பதே என்னுடைய எதிர்பார்ப்பு. என்னுடைய வாலிப நாட்களில் இருந்து எனக்கு மனைவியாக இருந்து வரும் டிரீசியாவுக்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். அவருக்காகவே இந்த நூலை நான் எழுதியிருக்கிறேன்.

என்னுடைய பிள்ளைகள் சிறுவர்களாக இருந்தபோது அவர்களைக் கட்டி அணைத்து அவர்களைப் பார்த்து நான் கேட்பேன், ‘உங்களை நான் இந்தளவுக்கு எப்படி நேசிக்கிறேன்?’ என்று. அதற்கு பதிலாக, ‘நீங்கள் அந்த முறையில் என்மீது அன்புகாட்ட வேண்டும் என்று கர்த்தர் சொல்லித்தருவதால்தான்’ என்று பதில் சொல்ல அவர்களுக்கு சொல்லித் தந்திருக்கிறேன். தன்னுடைய அன்பை நான் என் மனைவிக்கு எப்படிக் காட்டுவதென்று எனக்கு சொல்லித்தருகின்ற என் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். டிரீசியாவும் நானும் எங்களுடைய மரணம் வரைக்கும் ஒருவருக்கொருவர் அவருடைய ‘சுவிசேஷ அன்பைக்’ காட்டி வாழ்ந்திருப்போமானால் எங்களுடைய தாம்பத்திய வாழ்க்கை எங்களை முதன் முதலாக நேசித்த இயேசு கிறிஸ்துவுக்கு சாட்சியாக இருக்கும்.

# பொருளடக்கம்

முன்னுரை ........................................................................7

அறிமுகம் ........................................................................11

**பாகம் 1**
**தாம்பத்திய உறவில் நெருக்கத்தை நோக்கி பயணம்**

முகவுரை ........................................................................17

**அத்தியாயம் 1:** கடவுளைப் பற்றிய சத்தியம், தாம்பத்திய உறவில் நெருக்கத்தை அடைய வழிகாட்டுகின்றது ........................................................................20

**அத்தியாயம் 2:** படைப்பின் தத்துவம், தாம்பத்திய உறவின் நெருக்கத்திற்கு வழிகாட்டுகின்றது. ....................36

**அத்தியாயம் 3:** வீழ்ச்சியின் சரித்திரம், தாம்பத்திய உறவின் நெருக்கத்திற்கு வழிகாட்டுகின்றது ....................49

**அத்தியாயம் 4:** மீட்பின் கோட்பாடு தாம்பத்திய உறவின் நெருக்கத்திற்கு வழிகாட்டுகின்றது ....................70

## பாகம் 2
## தாம்பத்திய உறவில் நெருக்கமும், சுவிசேஷ அன்பின் கிருபையும்

**முகவுரை**..........................................................78

**அத்தியாயம் 5:** சுவிசேஷ அன்பு சந்திக்கும் சவால்கள் ....79

**அத்தியாயம் 6:** சுவிசேஷ அன்பின் எதிரி.........................94

**அத்தியாயம் 7:** சுவிசேஷ அன்புடையவர்களாய் இருங்கள்.......................................................... 108

**அத்தியாயம் 8:** சுவிசேஷ அன்பின் பரிமாற்றங்கள் ..........117

## பாகம் 3
## தாம்பத்திய உறவின் நெருக்கத்திற்கு எதிரான சவால்களை மேற்கொள்ளுதல்

**முகவுரை**.......................................................... 148

**அத்தியாயம் 9:** தலைமை வகித்தலும், அடங்கியிருத்தலும் சந்திக்கும் சவால்கள் .........................151

**அத்தியாயம் 10:** சுயநலமாகிய சவால்...............................166

**அத்தியாயம் 11:** வேதபூர்வமற்ற வார்த்தைப் பரிமாற்றமாகிய சவால்.....................................................181

**அத்தியாயம் 12:** தவிர்க்க முடியாத மரணமாகிய சவால்.......................................................................... 199

**நூலைப் பற்றி . .** ..........................................................220

# முன்னுரை

இந்த நூலின் முதல் பாகத்தில் நான் அடிப்படையான சில அம்சங்களை விளக்கியிருக்கிறேன். கர்த்தரைப் பற்றிய போதனைகள், ஆதியாகமத்தின் ஆரம்ப அதிகாரங்களில் சில மற்றும் தாம்பத்திய வாழ்க்கை பற்றிய சில அடிப்படை உண்மைகள் ஆகியவற்றை நாம் முதலில் பார்க்கப்போகிறோம். இந்த அடிப்படைப் போதனைகள் நம்மை ஊக்கப்படுத்தும். இந்த நூல் கல்லூரிப் பாட நூலாக இல்லாதபோதும், ஆழமான சத்தியங்களை நாம் சிந்தித்து ஆராய வைக்கப் போகின்றது. வேத உண்மைகளை நாம் சிந்தித்து ஆராயாவிட்டால், நம்முடைய தாம்பத்திய வாழ்க்கையில் நடைமுறையில் அந்த உண்மைகளைப் பயன்படுத்துவதற்கு அவசியமான வேத ஞானம் நமக்கிருக்கப் போவதில்லை. அடிப்படையான உண்மைகளை நாம் முதலில் வாசித்து சிந்தித்துப் பார்த்த பின்பே, நம் மனைவி மீது நாம் எத்தகைய அன்பைக்காட்ட வேண்டுமென்று சுவிசேஷம் போதிப்பதை நாம் விளங்கிக்கொள்ளப் போகிறோம், அதுவும் நம்முடைய தாம்பத்திய நெருக்கத்துக்கு இடையூறாக இருக்கும், நாம் போராடிக்கொண்டிருக்கும் நம்முடைய பாவத்தை எதிர்த்து அந்த அன்பைக் காட்ட வேண்டுமென்பதை நாம் விளங்கிக்கொள்ளப் போகிறோம். தாம்பத்திய வாழ்க்கையின் நெருக்கத்துக்கு

இடையூறாக இருக்கும் சில நடைமுறைக் காரியங்களை மேற்கொள்ளுவது எப்படி என்ற விளக்கத்தோடு இந்த நூலை முடிவுக்கு கொண்டுவரப்போகிறோம். தாம்பத்திய வாழ்க்கையின் நெருக்கத்துக்குத் தடையாக அநேக காரியங்கள் இருக்கின்றன. நான் அவற்றில் நான்கைத் தெரிவு செய்திருக்கிறேன்.

1. அதிகாரத்தை வெறுத்து அதற்கு எதிராக நிற்கும் நம்முடைய சமுதாயத்தின் குழப்ப மான கலாச்சாரம்.

2. சுயநலத்தையே நாடி நிற்கும் நம்முடைய வாழ்க்கை முறை.

3. வேதபூர்வமான போதனைகளை விளக்கப் படுத்துவதில் ஏற்படும் பதட்டம்.

4. மரணத்தை நாம் அணுகுகின்ற முறை.

இந்த நூல் முழுவதிலும் நாம் சிந்தித்து அதன்படி நடக்க வேண்டுமென்று வற்புறுத்தப்படுவோம். புதிதாகிற மனத்தோடு அவருடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று நிரூபிக்கும் வகையில் நாம் நம்மை அவருக்கு ஒப்புக்கொடுப்போம் (ரோமர் 12:1-2). வேதபூர்வமாக சிந்தித்து அதன்படி நடப்பது நம்முடைய தாம்பத்திய வாழ்க்கையில் நெருக்கத்தை வளர்த்து அதன் மூலம் கர்த்தரை மகிமைப்படுத்துவதற்கு அவசியமாயிருக்கிறது.

கிறிஸ்தவ தம்பதிகள் வாசிப்பதற்காகவே இந்த நூலை நான் எழுதியிருக்கிறேன். அதேவேளை திருமணமாகாத நிலையிலிருப்பவர்களும் இதை வாசிக்கப்போகிறார்கள் என்பதை நான் உணர்ந்திருக்கிறேன். இதை நான் திருமணமானவர்களுக்கே எழுதியிருக்கிறேன் என்பதை அவர்கள் உணர்வது அவசியம். இந்நூலில் நான்

கொடுத்திருக்கும் ஒரு சில விளக்கங்கள் திருமணமாகாது தனித்து வாழ்பவர்களுக்கு ஆதரவாக இருப்பதுபோல் தோன்றலாம். இயேசு கிறிஸ்துவும், பவுலும் திருமணமாகாது தனித்து வாழ்க்கை நடத்துகிறவர்களைப் பற்றி விளக்கியிருக்கும் போதனைகளை இந்த நூலில் என்னால் முழுமையாக விளக்க முடியாது. ஆகவே, திருமணமானவர்கள் தாம்பத்திய வாழ்க்கையில் அனுபவிக்கக்கூடிய விசேஷமான நெருக்கத்தை இந்நூலில் விளக்குவதே எனது நோக்கமாக இருக்கிறது, அதுவும் கிறிஸ்தவ தம்பதிகள் மணவாழ்வில் அனுபவிக்கக்கூடிய நெருக்கத்தையே நான் விளக்கியிருக்கிறேன். தாம்பத்திய வாழ்க்கையில் இருக்க வேண்டிய நெருக்கத்தை நான் விளக்குகிறபோது ஆர்வம் காரணமாக கொஞ்சம் அதிகமாகவே பேசிவிட்டது போல் உங்களுக்குத் தோன்றலாம். அதற்குக் காரணம் கர்த்தரின் வார்த்தையை விசுவாசித்து அவருக்குக் கீழ்ப்படிகின்ற தம்பதிகளுக்கு கிறிஸ்து அற்புதமான ஆசீர்வாதங்களை அள்ளி வழங்குகிறார் என்பதை நான் முழுமனதோடு நம்புவதால்தான்.

இந்த நூலில் விளக்கப்படுகின்ற போதனைகளை நான் ஆண்மைக்கு முதலிடம் கொடுத்தே எழுதியிருக்கிறேன். திருமண வாழ்க்கையைப் பொறுத்தவரையில் நான் கணவன் அல்லது கணவர்களோடு பேசுவதுபோலவே இந்நூலை எழுதியிருக்கிறேன். தாம்பத்திய வாழ்க்கையில் நெருக்கத்தை ஏற்படுத்துவதில் கணவனே முன்னின்று அதற்கான அனைத்தையும் செய்ய வேண்டும் என்று வேதம் எதிர்பார்க்கின்றது. தன் மனைவி மீது அவன் அன்பு காட்ட வேண்டுமென்று வேதம் சொல்லுகிறது (எபே. 5:22-23). நம் மனைவிகளை நாம் 'சுவிசேஷ அன்பு' காட்டி நேசிப்போமானால் நம்முடைய தாம்பத்திய வாழ்க்கையில் அதிகமான நெருக்கத்தை நாம் பார்ப்போம். இத்தகைய தாம்பத்திய நெருக்கத்தை மனைவியின் துணையில்லாமல் மணவாழ்க்கையில் நம்மால் அனுபவிக்க முடியாது.

*ஆனால், மனைவி மீது அன்பு காட்டும்படியான கட்டளை வேதத்தில் கணவனுக்கே விசேஷமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் இந்நூலின் மூலம் கிறிஸ்தவ தம்பதிகளோடு பேசுகிறேன், ஆனால், கணவர்களோடு முக்கியமாக பேசுகிறேன். கணவன்மார்களே! உங்களுக்கு வரப்போவதைப் பற்றி முன்கூட்டியே அறிவிக்கிறேன்.*

# அறிமுகம்

போதகர் அலன் டன் மணவாழ்க்கையைப் பற்றிய ஒரு நூலை எழுதி அருமையானதொரு பணியை கிறிஸ்தவத்திற்கு செய்திருக்கிறார். தமிழில் மண வாழ்க்கையைப் பற்றிய நல்ல நூல்கள் அரிது. இருக்கின்ற ஒன்றோ இரண்டோகூட மணவாழ்க்கையைப் பற்றிப் பொதுவாக சில நல்ல காரியங்களை சொன்னாலும், வேத அடிப்படையிலும், இறையியல் அடிப்படையிலும் மணவாழ்வு பற்றிய தெளிவான, ஆழமான விளக்கங்களைக் கொடுக்கின்ற நூல்களைத் தேடிக் கண்டுபிடிப்பது மிகவும் அரிது. தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்ற அலன் டன்னின் இந்நூல் அந்தக் குறையைத் தீர்த்து வைத்திருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் மணவாழ்க்கையில் உண்மையிலேயே வேதபூர்வமான நெருக்கத்தை நடைமுறையில் அனுபவித்திருக்கும் ஒருவரால்தான் இத்தகைய நூலை இந்த முறையில் எழுத முடியும். இந்நூலில் தரப்பட்டிருக்கும் வேத விளக்கங்கள் வெறும் ஏட்டுச் சுரைக்காயல்ல. கிறிஸ்து எந்தளவுக்கு தன்னுடைய மணவாட்டியான சபையை நேசிக்கிறாரோ அந்த நேசத்தை மணவாழ்க்கையில் நிதர்சனமாகக் கண்டிருக்கும் ஓர் ஆவிக்குரிய மனிதனின் இருதயத்திலிருந்து வருகின்ற வார்த்தைகளை இதில் காண்கிறோம்.

சுவிசேஷத்தை மணவாழ்க்கையோடெல்லாம் தொடர்புபடுத்தி இந்தவிதமாக ஆழமாகப் பார்த்து வருகின்ற அளவுக்கு நம்மினத்தில் கிறிஸ்தவம் இறையியல் போதனைகளின் தாக்கத்தை இன்னும் அடைந்திருக்கவில்லை. அத்தோடு நம்மினப் பண்பாடும் அந்தளவுக்கு மணவாழ்க்கையைப் பற்றி வெளிப்படையாகப் பேசவும், ஆராயவும் அனுமதிப்பதில்லை. இந்நிலைமையில் சுவிசேஷ அன்பு எப்படிப்பட்டது என்பதையும் அது மணவாழ்க்கையில் எப்படிப் பிரகாசிக்க வேண்டும் என்பதையும் அலன் டன் அருமையாக இதயத்தைத் தொடும்வகையில் இந்நூலில் விளக்கியிருக்கியிருக்கிறார். இந்தக் கோணத்தில் மணவாழ்க்கையைப் பற்றி விளக்கும் ஒரு நூலை நான் இதுவரை வாசித்ததேயில்லை.

கிறிஸ்தவர்கள் மத்தியில் தாம்பத்திய உறவில் சுவிசேஷ அன்பின் அடிப்படையில் இருக்க வேண்டிய நெருக்கமான உறவைப் பற்றியது இந்நூல். இந்த இருபத்தியோராம் நூற்றாண்டில் நம்மினத்துக் கிறிஸ்தவர்களின் மணவாழ்க்கையில் அத்தகைய சுவிசேஷ அன்பின் அடிப்படையிலான நெருக்கத்தை இந்த நூலால் ஏற்படுத்தி விடமுடியுமா? என்று என்னால் எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. ஏன் தெரியுமா? நம்மினத்தில் நாம் திருமணத்தையும், குடும்ப வாழ்க்கையையும் அணுகுகின்ற முறையே வித்தியாசமானது. தமிழினப் பண்பாட்டின் பெயரில் நம்மினத்தில் பின்பற்றப்பட்டு வருகின்ற நடவடிக்கைகள் வேதமும், இந்த நூலும் எடுத்துவிளக்குகின்ற தாம்பத்திய நெருக்கத்தை மணவாழ்க்கையில் கிறிஸ்தவர்கள் நடைமுறையில் அனுபவிப்பதற்கு பெருந்தடையாக இருக்கின்றன. மணவாழ்க்கையில் ஈடுபடப்போகும் ஆணும், பெண்ணுமாகிய கிறிஸ்தவர்கள் அதைப் பற்றி பெரிதும் சிந்தித்துப் பார்க்காமலேயே அந்த வாழ்க்கைக்கு தங்களை ஒப்புக்கொடுக்கிறார்கள். பெற்றோர்களின்

வற்புறுத்தல், உறவினர்களின் எதிர்பார்ப்பு, சமுதாயக் கட்டுப்பாடு, பொருளாதாரத் தேவை, திருமண வயதாகிவிட்டது, மணவாழ்க்கை பற்றிய உலகத்தைச் சார்ந்த எண்ணங்கள் என்று பல விஷயங்கள் கிறிஸ்தவ மணவாழ்க்கை பற்றிய ஆவிக்குரிய வேதசிந்தனையே உருவாக முடியாதபடி இன்றும் பெருந்தடைகளாக நம்மினத்தில் இருந்து வருகின்றன. திருமணமாகப் போகும் கிறிஸ்தவ ஆணுக்கும், பெண்ணுக்கும் அவர்கள் காலெடுத்து வைக்கப்போகும் வாழ்க்கை பற்றிய விளக்கமான திருமண ஆலோசனைகளையே சபைப் போதகர்கள் நம்மினத்தில் கொடுப்பதில்லை. இந்த நவீன நூற்றாண்டிலும் அதைப்பற்றியெல்லாம் வெளிப்படையாக பேசுவது ஆகாது என்ற அசட்டுத்தனம் தொடர்ந்திருந்து வருகிறது. நம்மினத்தில் கண்களைத் துணியால் மறைத்துக்கொண்டு உயரத்தில் கயிற்றில் தொங்குகின்ற ஒரு சட்டியைக் கம்பால் அடிக்கின்ற கிராமத்து விளையாட்டுப் போட்டியொன்றிருப்பது உங்களுக்குத் தெரியும். நம்மவர்கள் திருமண வாழ்க்கையை ஆரம்பிக்கும் முறை இந்த விளையாட்டுப் போட்டியைத் தான் எனக்கு நினைவூட்டுகிறது. கண்களை மூடிக்கொண்டு எங்கு போகிறோம் என்று தெரியாமல்தானே மணவாழ்க்கையில் எல்லோரும் குதித்து விடுகிறோம்.

நம்மினத்துப் பிள்ளைகளை நாம் வளர்க்கும் முறையும் அவர்களைத் திருமணத்திற்கு ஆவிக்குரிய விதத்தில் தயார் செய்வதில்லை. முப்பது வயதிலும் பெற்றோர்களுக்கு தலையாட்டிப் பொம்மையாக இருந்து, அவர்கள் காட்டுகின்ற போட்டோவில் இருக்கும் பெண்ணைப் பார்த்து தலையாட்டி திருமணத்திற்கு சம்மதிப்பது இன்றும் நடந்துவருகிறதொன்றுதான். ஆண் பிள்ளைகள் நம்மினத்தில் ஆண்மையுள்ளவர்களாக, எதிர்காலத்தில் மனைவியாக வரப்போகிறவளுக்கு பாதுகாப்பளித்து, வாழ்வளித்து அன்போடு வழிநடத்தக் கூடியளவுக்கு

போதனைகள் அளிக்கப்பட்டு வளர்க்கப்படுவதில்லை. தனக்குப் பிடித்தவளை, தகுந்தவளை ஆவிக்குரிய விதத்தில் தேர்ந்தெடுக்கும்படி வளர்க்கப்படுவதில்லை. இத்தகைய வளர்ப்பு முறை திருமணமாகும் ஆண்களை, மனைவியை தன் கண்போல நேசித்துப் போஷிக்கும் நல்ல ஆண்மையுள்ள கணவர்களாக இருப்பதற்கு பெருந் தடையாக இருக்கின்றது. கிறிஸ்தவ குடும்பங்களிலும் இதே நிலைதான். இதிலும் பெண்களின் கதியோ அதை யும்விட மோசமானது.

அலன் டன் திருமண வாழ்க்கையில் ஆண், ஆண்மை யோடு, அதிகாரமுள்ளவனாக மனைவியை அன்போடு வழிநடத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். அது முற்றிலும் உண்மை, அதுதான் வேதபோதனையுங்கூட. நம்மினத்தில் 'அதிகாரத்தை' நாம் வேத அடிப்படையில் அறிந்திருக்கவில்லை. மனைவி பதில் சொல்லாமல் நாம் சொல்லுவதற்கெல்லாம் தலையாட்டிப் பொம்மைபோல் தலையாட்ட வேண்டும் என்பதை நாம் அதிகாரமாக தவறாக நினைக்கிறோம். வேதம் 'அதிகாரம்' என்று விளக்குவது ஆணுக்கே உரித்தான, இருக்க வேண்டிய ஆண்மையோடு கூடிய, கர்த்தருடைய இறையாண்மையை நினைவூட்டும், அன்போடு கூடிய அதிகாரத்தையே. கால்மேல் கால் போட்டுக் கட்டிலில் உட்கார்ந்து பேப்பர் வாசித்துக்கொண்டு, 'காப்பி கொண்டு வா' என்று சொல்லும் ஆண்மையில்லாத அதிகாரத்தை அல்ல அல்லது காப்பியில் சர்க்கரை குறைவு என்பதற்காக மனைவியை ஆணவத்தோடு திட்டும் அதிகாரப்போக்கை அல்ல. மனைவியைத் தன்னுடைய சொந்த சரீரமாக நினைத்து சகல அன்பையும் கொட்டி மென்மையோடு நடத்தி அவளுடைய நிரந்தர பாதுகாவலனாக ஆண்மையோடு நடந்து வருகிறவனே மெய்யான அதிகாரத்தை அறிந்திருக்கிற கணவன்.

சுவிசேஷ அன்பின் அடிப்படையில் தாம்பத்திய

உறவின் நெருக்கத்தை நம்மினத்து கிறிஸ்தவர்கள் அலன் டன் விளக்கும் விதத்தில் மணவாழ்வில் ருசி பார்ப்பது எப்படி? மெய்யாகவே கிறிஸ்தவ மண வாழ்க்கையில் அலன் டன் விளக்கியிருக்கிறபடி வாழ வேண்டுமானால் ஒரு பெரும் ஆவிக்குரிய சீர்திருத்தம் நம்மினத்துக் கிறிஸ்தவத்திலும், திருச்சபையிலும் ஏற்படாமல் நடைமுறையில் நடப்பது இயலுமா என்று என்னை எண்ண வைக்கின்றது. இருந்தாலும் இந்த இருபத்தியோராம் நூற்றாண்டில் பண்பாட்டின் பெயரில் இருந்து வரும் சமுதாயப் போலித்தனங்களுக்கு இடங்கொடாமல் கிறிஸ்தவ மணவாழ்க்கையின் பொறுப்புக்களை உணர்ந்து, தேவபயத்தோடு அதற்குத் தங்களை ஒப்புக்கொடுத்துவரும் கிறிஸ்தவ தம்பதிகளுக்கு இந்த நூல் நிச்சயம் பயனுள்ளதாக அமையும்.

என்னைப் பொறுத்தவரையில் இந்நூலைப் பயன்படுத்தி எல்லா சபைகளிலுமே போதகர்கள் மணவாழ்க்கை பற்றி பிரசங்கங்களை நிச்சயம் கொடுக்க வேண்டும். அந்தளவுக்கு அவர்களுக்கு தைரியம் இருக்குமா என்பதுதான் தெரியவில்லை. திருமணமாகப்போகும் ஒவ்வொரு கிறிஸ்தவ தம்பதிகளும் இந்நூலை திருமணத்திற்கு முன் கவனத்தோடு வாசிப்பது அவசியம். திருமணமான தம்பதிகள் தாழ்மையோடு இந்நூலை வாசித்து தங்களுடைய தாம்பத்திய வாழ்க்கையில் மெய்யான ஆவிக்குரிய நெருக்கத்தை அனுபவிக்கலாம். எத்தனையோ பிரச்சனைகளை வேதபூர்வமாக தீர்த்துக்கொள்ளலாம். திருமண விழாவில் கிறிஸ்தவ புதுமணத் தம்பதிகளுக்கு இது பரிசாகக் கொடுக்கப்பட வேண்டும். புதிதாக திருமணமாகப் போகிறவர்களுக்கு திருமணத்திற்கு முன் போதகர்கள் வகுப்புகளெடுத்து அதிகாரம் அதிகாரமாக இந்த நூலை விளக்கிப் போதிப்பது அவசியம். அப்படிச் செய்கிற போதகர்கள் அநேகருடைய வாழ்க்கையில் பிற்காலத்தில் ஏற்படப் போகும் பிரச்சனைகளில்

*இருந்து அவர்களுக்கு விடுதலை கொடுத்தவர்களாக இருப்பார்கள். போதகர்களே! இதைச் செய்யும் தைரியமும், பக்குவமும் உங்களுக்கு இருக்கிறதா? அத்தோடு நம்மினத்தில் போதக ஊழியத்தில் இருக்கும் ஒவ்வொரு போதகரும் இதைத் தன் மனைவியோடு சேர்ந்து வாசிப்பது அவசியம். தாம்பத்திய உறவை சுவிசேஷ அன்போடு நாமே நடத்தாமல் மற்றவர்களுக்கு வழிகாட்ட முடியுமா?*

*நல்ல குடும்பங்கள் இருக்குமிடத்தில்தான் நல்ல சபையைக் காணமுடியும் என்று ஒருவர் சொல்லி யிருக்கிறார். அது சத்தியமான வார்த்தை. தாம்பத்திய வாழ்க்கை எபேசியர் 5ல் பவுல் விளக்கியிருக்கும் கிறிஸ்துவுக்கும், அவருடைய மணவாட்டியான சபைக்கும் இருக்கும் உறவை அடையாளம் காட்டுவதாக இருக்கும்போதே குடும்பங்கள் நல்ல குடும்பங்களாக இருக்க முடியும். இந்த நூலைத் தமிழில் மொழிபெயர்த்து வழங்க கர்த்தர் எங்களை வழிகாட்டியதற்காக அவருக்கு நன்றி கூறுகிறோம்.*

**ஆர். பாலா**

பதிப்பாசிரியர்,
போதகர், சவரின் கிரேஸ் சபை,
ஆக்லாந்து, நியூசிலாந்து

# பாகம் 1

# தாம்பத்திய உறவில் நெருக்கத்தை நோக்கி பயணம்

## முகவுரை

மண வாழ்வில் தம்பதிகள் ஆழ்ந்த நெருக்கத்தை அடைய முயற்சிப்பதில் அநேக புதிரான காரியங்களும் அடங்கியிருக்கின்றன. நாம் மண வாழ்வில் இணைந்து தம்பதிகளாக ஆனதும், ஒருவருக்கொருவர் நெருக்கமான உறவை ஏற்படுத்திக்கொள்ள முயலுகிறோம். ஆனால் எதிர்பார்க்கின்ற அளவுக்கு நெருக்கத்தை நாம் இன்னமும் அடையவில்லை என்பதை உணருகிறோம். ஆம், நாளுக்கு நாள் நாம் ஒருவரையொருவர் அதிகமதிகமாக விளங்கிக்கொண்டு வந்தாலுங்கூட இன்னும் பல விஷயங்களில் ஒருவருக்கொருவர் அந்நியர்களாகவே இருக்கிறோம் என்பதும் நமக்கு விளங்குகிறது. நாம் ஓரளவிற்கே ஒருவரையொருவர் அறிந்து கொண்டிருக்கிறோம். இன்னும் அறிய வேண்டியது ஏராளமாக இருப்பது விளங்குகிறது. திருமணத்தில் இணைந்தவர்கள் ஒருவரையொருவர் ஆத்மீக ரீதியில் புரிந்துகொள்ளுவதென்பது வாழ்நாள் முழுவதுமாக நடக்கின்ற ஒரு பயணம். சொல்லப்போனால், வாழ்வின் இறுதியில்கூட ஒருவரைப் பற்றி மற்றொருவர் முழுவதுமாக விளங்கிக்கொண்டிருக்கிறோம் என்று கூறமுடியாது. இருந்தாலும், உண்மையான தோழமையை நன்றாக

உணர்ந்து கொண்டிருக்கிறவர்கள் ஆரம்பிக்கின்ற தொடர் பயணம் என அதைக் குறிப்பிடலாம். மணவாழ்வில் நெருக்கத்தை அடைய வேண்டுமானால் நீ உண்மையான தோழமை உணர்வைக் கொண்டிருக்க வேண்டும். ஏனென்றால், நீ எவ்வளவுதான் நெருங்கிப் பழகினாலும், நீ இருக்க வேண்டிய அளவுக்கு தோழமையாக இல்லை என்பதே உண்மை. இதுதான் நாம் விவாக உறவில் காணும் புதிரான காரியம்.

நட்சத்திரங்களை வழிகாட்டியாகக் கொண்டு பழங்காலத்து மாலுமிகள் கடற்பிரயாணத்தை மேற் கொள்ளுவார்கள். அந்த பயணத்தை, திருமண உறவின் நெருக்கமான நிலையை அடையும் பயணத்துக்கு ஒப்பிடலாம். திருமண உறவின் நெருக்கத்தை நோக்கிய பயணத்தில் நமக்கு வழிகாட்டியாக நான்கு நட்சத்திரக் குறிப்புகளைக் காணலாம். மாலுமிகள் தங்கள் பயணத்தில் எப்படி நட்சத்திரங்களை கவனமாகப் பார்த்துக் கொண்டே தங்கள் கப்பலை செலுத்து கிறார்களோ, அதேவிதமாக நாமும் இந்த நான்கு நட்சத்திர வழிகாட்டிகளை கருத்தோடு கவனிப்போம். பயணத்தில் எதிர்பாராதவிதமான கடும் புயலும் காற்றும், அகோரமான அலைகளும் நமது பயணத்தை பாதியிலேயே முடித்துவிடும்படியாக அச்சுறுத்தலாம்; சில சமயங்களில், நிலைபெயர்ந்து போகின்ற கருமையான மேகங்கள் நமது பார்வையையே மறைக்கலாம்; அல்லது, காற்று சிறிதும் வீசாமல், மேகங்களற்ற சூழ்நிலையில், சூரியனின் கடுமையான வெப்பக்கதிர்கள் நமது கண்களைக் கூசச் செய்து, அவ்விடத்தைவிட்டு நகரமுடியாத நிலைமைக்கு நம்மை ஆளாக்கி, எதுவும் செய்யக்கூடாத பிணங்களைப் போன்ற சூழ்நிலைக்கு நம்மைத் தள்ளலாம். நமது கப்பலையே கவிழ்த்துப் போடக்கூடிய பயங்கரமான சுழல்களைக் குறித்தும் நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். கப்பலுக்குள்ளேயே சந்திக்கக்கூடிய எதிர்பாராத பிரச்சனைகளைக்

குறித்தும் நாம் விழிப்பாயிருக்க வேண்டும். கப்பலின் வேலையாட்கள் தங்கள் பணிகளை சரிவர செய்யாமல் இருக்கலாம்; மாலுமிகள் மேற்கொள்ள வேண்டிய கடுமையான வாழ்க்கைமுறை மனசோர்வை ஏற்படுத்தி, கப்பலைவிட்டு குதித்து ஓடிவிடலாமா என்கிற மனநிலையை தோற்றுவிக்கலாம். சமாதானமோ அல்லது வேதனையோ, எப்படிப்பட்ட சூழ்நிலை நமக்கு நேரிட்டாலும் இந்த நான்கு வழிகாட்டும் நட்சத்திரக் குறிப்புகள் நமது எண்ணத்திலிருந்து அகன்று விடாதபடிக்கு கவனமாக இருக்க வேண்டும்.

விவாகத்தில் நெருக்கமான நட்பைப் பெற வழிகாட்டு கின்ற அந்த நான்கு நட்சத்திர குறிப்புகளாவன:

1. கடவுளைப் பற்றிய சத்தியம்

2. படைப்பின் தத்துவம்

3. வீழ்ச்சியின் சரித்திரம்

4. மீட்பின் கோட்பாடு

திருமணமாகிய கப்பலை வெற்றிகரமாக ஓட்டிச் செல்வதற்கு இந்த நான்கு குறிப்புகளும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். நமது பயணத்தில் சரியான திசையைக் கண்டறியும் கருவியாக அவை நமக்கு உதவும்; வழிவிலகவிடாமல் பாதுகாக்கும். கடவுளின் மகிமையான துறைமுகத்தை நோக்கி நமது கப்பலை செலுத்த வழிகாட்டும்.

# அத்தியாயம் 1

# கடவுளைப் பற்றிய சத்தியம், தாம்பத்திய உறவில் நெருக்கத்தை அடைய வழிகாட்டுகின்றது

## நெருக்கமான உறவும், கடவுளின் தன்மையும் (being of God)

*விவாகத்தில் நெருக்கமான நிலையை அடையும் பயணத்தில் நமக்கு முதலாவது வழிகாட்டியாக இருப்பது கடவுளைக் குறித்து அறிந்துகொள்ளுகின்ற சத்தியமே. சர்வ வல்லவராகிய அவர் ஒருவரே மெய்யானவர். சகலமும் அவராலும், அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது. அவருக்கே என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக. ஆமென் (ரோமர் 11:36). திருமணத்தில் ஏற்படும் நெருக்கமான நட்பானது, பிரத்தியேகமானதும், அந்தரங்கமானதும், உள்ளுணர்வில் ஏற்படுகிறதுமான காரியமாகும். இந்த திருமண நெருக்கத்தைக் குறித்து நாம் சரியாக விளங்கிக்கொள்ள வேண்டுமானால் ஆதியிலே (ஆதி. 1:1) இருந்த தேவனைக் குறித்து சிந்தித்துப் பார்க்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. நமது திருமண உறவின் நெருக்கத்தை நோக்கிய பயணத்தில், கடவுளை நோக்கி நமது கவனத்தை திசை திருப்பியவர்களாக அதை ஆரம்பிக்க வேண்டும்.*

*நாம் இயல்பாகவே திருமணத்தில் நெருக்கத்தை நாடுகிறவர்களாக இருக்கிறோம். ஏனென்றால், அதுவே கடவுளின் தன்மையாகவும் இருப்பதால் அத்தகைய எண்ணம் நமக்குள்ளும் இருக்கிறது. திருமண உறவின் நெருக்கம் என்பது, வெறும் சரீரப்பிரகாரமான இச்சை களையும் மிருக உணர்ச்சிகளையும் விட மேலானது. குரங்கிலிருந்து மனிதன் தோன்றியதாக கூறிக் கொண் டிருக்கும் இயக்கத்தை சேர்ந்தவர்கள், திருமணத்தில்*

*நெருக்கத்தை அடைய மனிதனுக்கு இருக்கும் ஆவல், இனப்பெருக்கத்துக்கு வழிவகுக்கின்ற சாதாரண சரீர உணர்ச்சிதான் என்றும், ஆதிக்கம் செலுத்துவதற்கு ஆண் எடுக்கின்ற முயற்சியென்றும், சரீரப்பசியைத் தீர்த்துக்கொள்ளுகின்ற உணர்வுதான் அது என்றும் கூறிவிடுகிறார்கள். ஆனால் அது அப்படியல்ல. நாம் மனிதராக இருப்பதற்கே இத்தகைய தோழமை உணர்வு அவசியமாயிருக்கிறது. ஏனென்றால் நாம் கடவுளின் சாயலில் படைக்கப்பட்ட படைப்புகள். படைப்பாகிய நாம் படைத்தவரின் ஒப்பற்ற தன்மையை பிரதிபலிப்பவர்களாக இருக்க வேண்டுமல்லவா!*

## நாம் "கடவுளின் சாயலை" உடையவர்கள்

*ஆதி. 1:26 வசனத்தைக் கவனித்துப் பாருங்கள். அவர் தமது சாயலில் மனிதனை எவ்விதம் உருவாக்குகிறார் என்பதை கவனியுங்கள். "பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக . . . என்றார்." ஒருவராகிய அந்த தேவன், வேண்டுமென்றே பன்மையில் பேசுகின்றார். "நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக."*

*இதைக் குறித்து வேத அறிஞர்கள் பல்வேறுவிதமாக கருத்து தெரிவிக்கிறார்கள். மரியாதை கலந்த தொனியில் அவர், "நாம்", "நமது" என்று கூறுகிறார் என சிலர் கருதுகிறார்கள். எபிரெய மொழியில் மரியாதையையும், மகத்துவத்தையும், ராஜகம்பீரத்தையும் அறிவிக்க அப்படி குறிப்பிடுவது வழக்கம் என்றும், வேறு சிலர், கடவுள் தமது வானசேனையினிடத்தில் அப்படி பேசுகிறார் என்றும் நினைக்கிறார்கள். "எலோஹிம்" என்பது கடவுளைக் குறிப்பிடும் ஒரு சொல்லாக பழங்காலத்தில் இருந்தது. அது தேவதூதர்களையும் குறிக்கும் ஒரு சொல்லாகவும் காணப்பட்டதால், தூதர்களையும் சேர்த்து, "நமது"*

*சாயலாக மனிதனை உருவாக்குவோம் என்று கடவுள் சொல்வதாக அவர்கள் எண்ணுகிறார்கள். தேவன் மனிதனை எலோஹிமிலும் (அதாவது தேவதூதரிலும்) சற்று சிறியவனாக உருவாக்கினார் என்று சங்கீதம் 8:5ல் நாம் பார்க்கிறோம். இந்த வசனத்தைக் கொண்டு அவர்கள், மேற்கூறியபடி நினைக்கிறார்கள். ஆனால் ஆதி. 1:26ல் நாம் காண்பது வெறுமனே ஓர் இலக்கிய சொற்றொடரா அல்லது தேவதூதர்களைக் குறிப்பிடுகிற ஒரு சொல்லா?*

*ஒரே கடவுளாகிய சர்வ வல்லவரின் திரித்துவ தத்துவமாகிய நபர்களின் இடையே நடைபெறும் சம்பாஷணையாக நான் அவ்வசனத்தை விளங்கிக்கொள்கிறேன். நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோம் என்பது கடவுளின் மாறாத தீர்மானம். படைப்பின் நோக்கத்தையே அது வெளிப்படுத்துவதாயிருக்கிறது. திரித்துவ கடவுளின் செயல்பாடுகளை ஆராயத் துணிந்திருக்கிற நாம் அவருடைய பரிசுத்த எல்லைக்குள் பிரவேசிக்கிறவர்களாயிருக்கிறோம். பயபக்தியோடு இதைக் குறித்து நாம் சிந்திக்க வேண்டும். ஆதி. 1:1ல் கடவுளை தனிநபராகக் காண்கிறோம். ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் படைத்தார் என்று வாசிக்கும்போது கடவுளை ஒரு தனி நபராகத்தான் காண்கிறோம். ஆனால் 2 ஆம் 3 ஆம் வசனங்களை கவனியுங்கள், "பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாயிருந்தது. ஆழத்தின்மேல் இருள் இருந்தது. தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக் கொண்டிருந்தார். தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார். வெளிச்சம் உண்டாயிற்று." இந்த முதல் மூன்று வசனங்களும் கடவுளின் திரித்துவ தன்மையை வெளிப்படுத்துவதாக இருக்கிறது. கடவுளின் மூன்றுவித செயல்பாடுகளைக் காண்கிறோம். முதலாம் வசனத்தில் நாம் பிதாவாகிய தேவனைக் காண்கிறோம். இரண்டாவது*

*வசனத்தில் ஆவியானவரைக் காண்கிறோம். மூன்றாவது வசனத்தில் தேவன் பேசுகின்ற வார்த்தையைக் கேட்கிறோம். தேவனுடைய வார்த்தையைக் குறித்து அப்போஸ்தலனாகிய யோவான் தனது சுவிசேஷத்திலே எழுதியிருப்பதைப் பாருங்கள். "ஆதியிலே வார்த்தை இருந்தது; அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது; அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை" யோவான் 1:1-3. ஆகவே ஆதியிலே தேவன் பேசின வார்த்தை, மாம்சமாகி . . . நமக்குள்ளே வாசம்பண்ணின குமாரனேயாகும் என்பது தெளிவாகிறது. ஆதி. 1ல் தேவன் பேசியதே, யோவான் 1ல் கடவுளின் வார்த்தையாக மாறியது. இவ்வுலகில் தேவனுடைய குமாரனாக வந்து பிறக்கவிருந்த நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே தேவனுடைய வார்த்தையாக, திரித்துவத்தின் இரண்டாவது நபராக, ஆதியிலேயே காணப்படுகிறார். ஜலத்தின்மேல் அசைவாடிக் கொண்டிருந்த தேவ ஆவியானவரே திரித்துவத்தின் மூன்றாவது நபராகும். ஆதி. 1:1ல் காண்கிற தேவன், திரித்துவத்தின் முதலாம் நபராகும்.*

## ஒருங்கிணைந்திருக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட தன்மை!

*மூன்று ஆள்தத்துவத்தைக் கொண்டிருந்தும் ஒருவரா யிருக்கிற கடவுளின் இந்த திரித்துவ தன்மையானது, நாம் யார், நாம் எப்படியிருக்க வேண்டுமென்பதை நமக்கு விபரிப்பதாக இருக்கிறது. ஏனென்றால், நாம் அவரைப் போல இருப்பதற்காக படைக்கப்பட்டிருக் கிறோம். இந்த திரித்துவ கடவுளின் சாயலாகவே நாமும் உண்டாக்கப்பட்டிருக்கிறோம். கடவுள் அவரது தன்மையை உடையவராக விளங்குவதுபோல அவருடைய சாயலில் படைக்கப்பட்ட நாமும் நமக் குரிய தன்மைகளை உடையவர்களாய் இருக்கிறோம்.*

நாம் யாரென்பதையும் நமது தன்மை எப்படிப்பட்டது என்பதையும் விளங்கிக்கொள்ள வேண்டுமானால், முதலாவதாக நாம் நம்மை உருவாக்கிய அந்த திரித்துவ கடவுளைக் குறித்து அறிந்துகொள்ள ஆரம்பிக்க வேண்டும். ஒரே தேவனாகிய அவர் தம்மை மூன்று நபர்களாக வெளிப்படுத்துகிறவராயிருக்கிறார். அந்த ஒரே தேவனாகிய கடவுளின் சாயலிலேதான் நாம் உருவாக்கப்பட்டிருக்கிறோம்.

ஆதி. 1:27ஐ பார்ப்போம். ஆண்களும் பெண்களும் கடவுளின் சாயலை வெளிப்படுத்துகிறவர்களாய் இருக்கிறார்கள். தேவன் தம்முடைய சாயலாக மனுஷனை படைத்தார்; அவனை தேவசாயலாகவே படைத்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களை படைத்தார். எபிரெய மொழியில் இப்பகுதி ஒரு கவிதை வடிவமாக எழுதப்பட்டிருக்கிறது. இது ஒரு முக்கியமான பகுதி என்பதை படிப்பவர்கள் விளங்கிக்கொள்ள வேண்டுமென்பதற்காக இந்த பகுதியை மோசே விசேஷமாக கவிதை வடிவில் எழுதியிருக்கிறார். நாம் இவ்வசனத்தை நன்றாக கவனிக்க வேண்டுமென்பதற்காக அதை திரும்பத்திரும்ப கூறி அதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார். இதிலுள்ள மிகவும் ஆழ்ந்ததை நாம் கவனிக்க வேண்டுமென்பதற்காக இதை கவிதை வடிவில் எழுதி நமது கவனத்தை அதன் பக்கம் திசை திருப்புகிறார். ஆணும் பெண்ணுமாகிய நாம் கடவுளின் சாயலாக இருக்கிறோம். ஆணும் பெண்ணுமாகிய நமது வித்தியாசமான தன்மைகளில் கடவுள் தமது சாயலை வெளிப்படுத்தியிருக்கிறார். மனிதகுலம் பாலின வேறுபாடுகளைக் கொண்டதாகவே உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ மனிதகுலம் உருவாக்கப்பட்டிருக்கிறது. பாலின வேறுபாட்டைக் கொண்டிருந்தே நாம் கடவுளின் சாயலை வெளிப்படுத்துகிறவர்களாயிருக்

*கிறோம். நமது பாலின வேறுபாடுகள், சரீரத்தையோ, மனதையோ, அல்லது சமூகநிலையையோ அடிப்படை யாகக் கொண்டதல்ல. ஆனால் ஆணும் பெண்ணுமான இந்த படைப்பு தெய்வீக நிலைமைக்கடுத்தது. கடவுளின் சாயலைத் தரித்துக் கொண்டிருக்கிற ஆணும் பெண்ணுமாகிய இருவர் திருமணத்தில் இணைவதை விளங்கிக்கொள்ள வேண்டுமானால் நாம் கடவுளைக் குறித்த சத்தியத்தை அறிந்துகொள்வதில் ஆரம்பிக்க வேண்டும். ஆணும் பெண்ணுமான மனிதனின் பாலின வேறுபாடு தெய்வீகத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதை எப்போதாவது உணர்ந்திருக்கிறீர்களா? ஆணும் பெண்ணுமாக வித்தியாசமான தன்மைகளில் நாம் படைக்கப்பட்டிருப்பதில் கடவுளுடைய முழுசாயலும் அற்புதமாக வெளிப்படுகிறது.*

*திருமணம், கடவுளைக் குறித்து நமக்கு என்ன கூறுகிறது? இதில் இருவர் ஒரே மாம்சமாகிறார்கள் (ஆதி. 2:24). திரித்துவராயிருந்தாலும் ஒன்றாக இருக்கிற கடவுளை பிரதிபலிப்பதாக திருமண உறவு இருக்கிறது. இரண்டாக (பன்மையில்) இருந்தவர்கள், திருமணத்தில் ஒன்றாக ஆகிறார்கள். நமது பாலின பன்மை (ஆணும் பெண்ணுமான நிலை), திருமணத்தில் ஒன்றாக்கப்பட்டு (ஒரே மாம்சமாகி), திரித்துவ கடவுளின் ஒன்றான சாயலை வெளிப்படுத்துவதாயிருக்கிறது. ஒன்றுக்கு மேற்பட்ட ஆள்தத்துவமிருந்தும் ஒருங்கிணைந்திருப்பதன் மூலம் தமது தெய்வீகத்தன்மையை திரித்துவ கடவுள் வெளிப்படுத்துகிறவராயிருக்கிறார்; திருமணத்தின் மூலமாக இணைக்கப்படும் ஆணும் பெண்ணும் ஒரே மாம்சமாகி, இருவராயிருந்தும் ஒன்றாயிருப்பதன் மூலம் படைப்பின் தன்மையை வெளிப்படுத்துகிறவர்களாய் இருக்கிறார்கள். அவர்கள் திருமணத்தின் மூலமாக ஒரே மாம்சமாவதால் கடவுளின் தனித்தன்மை வெளிப்படுகிறது.*

## பரிபூரணமான நிலை

*திரித்துவ கடவுளிடையே நிலவுகின்ற நெருக்கமான உறவை வெளிப்படுத்துவதற்கு ஓர் அடையாளமாக சரீரப்பிரகாரமான நெருக்கம் மனிதனிடம் படைக்கப்பட்டிருக்கிறது. திருமணத்தில் ஏற்படுகின்ற நெருக்கமான ஐக்கியம் என்பது வெறும் உடலுறவைக் குறிப்பது மாத்திரமல்ல. அதில் இன்னும் பல காரியங்கள் அடங்கியுள்ளன. இருந்தாலும் தம்பதியரிடையே ஏற்படுகின்ற அத்தகைய நெருக்கமானது, திரித்துவ கடவுளிடம் காணப்படுகின்ற ஐக்கியத்தை வெளிப்படுத்துகின்ற ஒரு சிறு அடையாளமாக இருக்கின்றது. இது, இருவராயிருந்தும் ஒன்றாயிருக்கின்ற நிலை. இருவர் ஒரே மாம்சமாகிற நிலை. மனிதனின் நெருக்கமான சரீர உறவை, ஆதி. 2:23,24ல் மோசே அழகாக படம்பிடித்தாற்போல எடுத்துரைக்கிறார். இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள். ஆதாமும் அவன் மனைவியுமாகிய இருவரும் நிர்வாணிகளாயிருந்தும் வெட்கப்படாதிருந்தார்கள். அவர்கள் நிர்வாணிகளாக இருந்தார்கள் என்பதை மோசே குறிப்பிடுகிறார். சரீர உறவை மோசே விவேகமாக தெரியப்படுத்துகிறார். உலகத்தின் முதலாவது தம்பதியரிடம் காணப்பட்ட சரீர உறவை கொச்சைப்படுத்தாமல், கண்ணியமாக அவர் எழுதுகிறார். யாரையாவது நிர்வாணமாக பார்ப்பதை சரீர உறவோடு சம்பந்தப்படுத்தி பழைய ஏற்பாட்டு புத்தகத்திலே (லேவி 18:6) எழுதப்பட்டிருப்பதைக் காணலாம். அவர்கள் இருவரும் நிர்வாணமாக இருந்தார்கள் என்று மோசே சொல்வதன் மூலமாக, அவர்களிடையே இருந்த சரீர உறவை மரியாதையோடு எடுத்துரைக்கிறார். அவர்களைப் பிரிக்கத்தக்க வகையில் எந்த பாவமும் அங்கு காணப்படவில்லை. ஒளிவுமறைவற்ற தன்மை அவர்களிடையே நிலவியது.*

தேவன், மிகவும் நல்லதென்று கண்ட, முடிவடைந்த நிலையிலுள்ள பரிபூரணமான அந்த படைப்புகள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறவர்களாக ஏதேன் தோட்டத்திலே காணப்பட்டதை ஆதி. 2:23,24 வசனங்களில் காண்கிறோம். மோசே அந்த அழகிய காட்சியை தன் கற்பனையில் கண்டு அதை ஓர் அழகிய படமாக நம் கண்முன் கொண்டுவர முயற்சிக்கிறார். கடவுள் படைத்த புராதனமான படைப்புகள் பின்னணியில் இருக்க, கடவுளின் சாயலில் படைக்கப்பட்ட ஆணும் பெண்ணும் தோட்டத்தில் உலாவி வருவதை மோசே நம் கண்முன் அழகான படமாக விபரித்துக் காண்பிக்கிறார். அந்த காட்சியை நாம் உற்றுப் பார்க்கும்போது, ஆணும் பெண்ணுமாக அவர்கள் இருவரும் மிகவும் நெருக்கமான ஐக்கியத்திலே இணைந்து காணப்படுவதில் கடவுளின் தன்மை பிரதிபலிப்பதை நாம் காண்கிறோம். ஒரே மாம்சமாக அவர்கள் செயல்படுவது, மூன்று ஆள்தத்துவமிருந்தும் ஒன்றாயிருக்கிற கடவுளின் தன்மையை மனிதனுக்கேற்றவிதத்தில் வெளிப்படுத்துவதாயிருக்கிறது. திரித்துவ கடவுளின் சாயலில் உருவாக்கப்பட்ட ஆணும் பெண்ணும் ஒரே மாம்சமான நிலைமைக்குட்படுத்தப்பட்டு, படைக்கப்பட்ட சகலத்தையும் ஆண்டுகொள்ளும்படி ஆசீர்வதிக்கப்பட்டார்கள். (இப்படி விளக்குவதன் மூலமாக தனிமையான வாழ்க்கையைத் தெரிந்து கொண்டிருக்கிற ஆணோ அல்லது பெண்ணோ கடவுளின் சாயலில் இல்லை என்று நான் கூறவர வில்லை. தனித்தனியாகவும் நாம் கடவுளின் சாயலில் தான் உருவாக்கப்பட்டிருக்கிறோம். திருமணமே செய்துகொள்ளாத இயேசு கிறிஸ்துவும் கடவுளின் சாயலில்தான் உருவாக்கப்பட்டிருந்தார் (கொலோ 1:15). மத் 19:12ல் அவர் தனிமையாயிருப்பவர்களை அங்கீகரிப்பதையும் காண்கிறோம். “தேவசாயல்” என்பது சந்ததியரை/புத்திரரைக் குறிக்கும் சொல்லாகவும் வேதாகமத்தில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே

*தனிமையாக இருக்கும் விசுவாசிகள், திருமணத்தில் இணைந்திருக்கும் விசுவாசிகள் ஆகிய அனைவருமே “கடவுளின் புத்திரர்” என்பதில் சந்தேகமில்லை).*

*தேவனுடைய மகிமையான ஐக்கிய நிலையை வெளிப் படுத்துவதற்காகத்தான் மனிதன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுப்பிரிந்து தன் மனைவியோடு இசைந்து இருக்க வேண்டும் என்கிற கட்டளையைப் பெற்றிருக்கிறான். தங்களிடையே இருக்கும் கண்ணியமான நெருக்கத்தின் மூலமாக கடவுளின் தன்மையை அவர்கள் பிரதிபலிக்கிறார்கள். என்ன ஓர் அழகான காட்சி! மிகவும் நல்லதென்று காணப்பட்ட அந்த படைப்புகள் தங்களுடைய ஐக்கியத்தின் மூலமாக சகலத்தையும் ஆளுகிறவர்களாக கடவுளுடைய சாயலையும் மகிமையையும் பிரதிபலிப்பதைக் காண்கிறோம். எல்லாம் ஒழுங்காயிருந்தது; சகலமும் கடவுளின் மகிமையை வெளிப்படுத்தியது.*

*திருமணத்தில் நெருக்கமான உறவு என்பதில் சரீர நெருக்கத்தையும் தவிர்த்து இன்னும் அநேகவிதங்களில் தம்பதிகள் நெருக்கமாக இருக்க வேண்டியதாயிருக்கிறது. ஒரே மாம்சம் என்பதில் ஆணும் பெண்ணுமாக பல காரியங்களில் நாம் ஒன்றாயிருக்க வேண்டியதின் அவசியத்தை எடுத்துரைக்கிறது. நான் ஓர் ஆண் என்னும்போது சரீரப்பிரகாரமாக மாத்திரம் நான் ஆணாக இருக்கிறேன் என்பதல்ல. நான் ஆண்மைக்குரிய மனநிலையையும், ஆண்மைக்குரிய உணர்ச்சிகளையும் கொண்டவனாயிருக்கிறேன். ஒரு பெண்ணும் அதே மாதிரிதான், பெண்மைக்குரிய மனநிலையையும், பெண்மைக்குரிய உணர்ச்சிகளையும் கொண்டிருக்கிறாள். சரீரத்திலும் மனதிலும் நாம் இவ்விதமான வேறுபாடுகளைக் கொண்டவர்களாக இருக்கிறோம். இவ்விரு வகையான மனோநிலையும், உணர்ச்சிகளும் ஒன்றாக சேர்ந்து கூடிவருகையில்தான்*

*நாம் சரீரப்பிரகாரமாகவும் ஆவியின்பிரகாரமாகவும் ஐக்கிய நிலையை அடைகிறவர்களாக இருக்கிறோம்.*

*நான் என் மனைவியோடு கொண்டுள்ள நெருக்கம், திரித்துவ கடவுளிடம் நிலவும் ஐக்கிய நிலையை பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும். இதைக் குறித்து ஒரு நிமிடம் சிந்தித்துப் பாருங்கள். நான் என் மனைவியோடு ஐக்கியமாக இல்லையென்றால், நான் கடவுளை அவமதிக்கிறவனாக இருப்பேன். நான் என் மனைவியோடு ஐக்கியமாக இல்லையென்றால் நான் கடவுளை சரியானவிதத்தில் பிரதிபலிப்பவனாக இருக்க மாட்டேன். நான் என் மனைவியோடு கொண்டுள்ள உறவுக்கும், நான் கடவுளோடு வைத்திருக்கும் உறவுக்கும் நேரிடையான தொடர்பு இருக்கிறது. அது என்னை பாதிக்கிறது. உங்களுடனேகூட உங்கள் மனைவிகளும் நித்திய ஜீவனை சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களாயிருக்கிறபடியால் நீங்கள் அவர்களுடனே விவேகத்துடன் வாழுங்கள் என்று பேதுரு கூறுகிறார். எதற்காக? உங்கள் ஜெபங்களுக்குத் தடை வராதபடிக்கு (1 பேதுரு 3:7). நான் என் மனைவியோடு ஐக்கியமாக வாழவில்லை என்றால் என்னால் சரியானவிதத்தில் கடவுளோடு தொடர்புகொள்ள முடியாது. “இருவராயிருந்தும் ஒன்றாயிருக்கிற” பக்குவம் திருமணத்தில் சரியாக ஏற்படவில்லையென்றால், தம்பதிகளாக சேர்ந்து நாம் கடவுளின் தன்மையை பிரதிபலிக்க முடியாது. அப்படியானால் கடவுளின் மகிமையை நமது திருமண உறவின் மூலமாக இழிவுபடுத்துகிறவர்களாகிறோம்.*

*இதுவரை கேள்விப்படாத விதங்களில் இன்று அநேகருடைய திருமண வாழ்க்கை பாதிப்புகளுக்கு ஆளாவதை நாம் பார்க்கிறோம். திருமணத்தின் உண்மையான நோக்கத்தையே சிதைக்கும் வகையில் இன்று பல்வேறு காரணங்களுக்காக திருமணங்கள் நடைபெறுகின்றன. திருமணத்தின் மூலமாக அடையப்*

போகும் உலக நன்மைகளைக் குறிவைத்தே திருமணங்கள் நிச்சயிக்கப்படுகின்றன. மனதுக்கு இதமளிப்பதற்காகவும், சரீரத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும், பிள்ளைகளின் நன்மைக்காகவும், பொருளாதார மேன்மை அடையவும், சமூகத்தில் அந்தஸ்து பெறவும் . . . இப்படி பல காரணங்களை திருமணம் செய்துகொள்வதற்குக் காண்பிக்கிறார்கள். அமெரிக்கர்கள் நடைமுறைவாதிகள். எது அவர்களுக்கு பலனை அளிக்குமோ அதை மாத்திரமே செய்வார்கள். திருமணத்தினால் அடையக்கூடிய நன்மைகளைக் குறித்து எத்தனையோ புள்ளிவிவரங்களை காண்பித்தாலும், நமது சொந்த நன்மையை பெரிதாகக் கருதி அதில் ஈடுபடுகிறவர்களாய் நாம் இருக்கக் கூடாது. நமது முக்கியமான குறிக்கோள், கடவுளை மகிமைப்படுத்துவதும், அவரில் களிகூருவதுமேயாகும். திருமணத்தில் அடையப்போகும் நன்மைகளை காண்பித்து, அதன் காரணமாக திருமணம் செய்வது மிகவும் நியாயமானது என்று நாம் கூறப்போவதில்லை. அப்படி சொல்வோமானால் அது சுயநலமானதும், கடவுளை மையமாகக்கொள்ளாமல் மனிதனுடைய நன்மைகளையே குறிவைத்து செய்வதாகும். கடவுளின் திட்டமே திருமணத்திற்கு ஆதாரமாக இருக்க வேண்டுமே தவிர மனிதனின் திட்டமல்ல. திருமணத்தில் நாம் கடவுளை மகிமைப்படுத்த வேண்டும். அவரில் மகிழ்கிறவர்களாக இருக்க வேண்டும். நாம் திருமண வாழ்க்கையை மேற்கொள்வதற்குக் கடவுளே காரணம்; அதில் நாம் நிலைத்திருக்க வேண்டும்.

## இயேசுவின் மொழியில் “ஒன்றாயிருத்தல்”

தனக்கும் பிதாவுக்கும், தனக்கும் நமக்கும் இடையேயுள்ள நெருக்கத்தை சுட்டிக் காண்பிப்பதற்கு இயேசு கிறிஸ்து, “ஒன்றாயிருத்தல்” என்கிற வார்த்தையை உபயோகிக்கிறார். இப்படி கூறுவதின் மூலமாக நம்மிடையே இருக்க வேண்டிய நெருக்கமான உறவின்

*தன்மையையும் எடுத்துரைக்கிறார். யோவான் 10:30ல் நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்கிறார். "ஒன்றாயிருத்தல்" என்கிற இதே வார்த்தையை மோசேயும் ஆதிப் பெற்றோரிடையேயிருந்த நெருக்கத்தைக் குறிப்பதற்கு உபயோகித்திருக்கிறார். அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள். "ஒரே" என்கிற இந்த வார்த்தை ஒரு பொதுவான வார்த்தை; பிதாவுக்கும் குமாரனுக்கும் சரீரப்பிரகாரமான சொந்தம் இருப்பதாக நிரூபிக்கும்படிக்கு நான் இந்த வாதத்தை உங்கள் முன் கொண்டுவரவில்லை. பிதாவுக்கும் குமாரனுக்கும் இடையேயுள்ள உறவு தெய்வீகமானது. அவர்களுக்கிடையிலுள்ள ஐக்கியத்தின் ஆழத்தைக் குறித்து நாம் ஆராய்ச்சி செய்ய முயற்சிக்க வேண்டாம். இருந்தாலும், பிதாவுக்கும் குமாரனுக்கும் இடையே காணப்படுகின்ற அந்த தெய்வீக ஒற்றுமையைத்தான் நாம் நமது திருமணத்தில் பிரதிபலிக்கிறவர்களாக இருத்தல் வேண்டும். யோவான் 17ம் அதிகாரத்தில் இயேசு கிறிஸ்து செய்யும் "பிரதான ஆசாரிய" ஜெபத்தை கவனியுங்கள். 20-23 வசனங்களை படியுங்கள்: நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காக வும் வேண்டிக்கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன். நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.*

"ஒருமைப்பாடு" என்கிற வார்த்தையை இயேசு உபயோகிக்கிறார். பிதா குமாரனிலும், குமாரன் பிதாவிலும் இருப்பதால் ஏற்படுகின்ற ஆனந்தத்தை சுட்டிக் காண்பித்து, அவர்களிடையே நிலவுகின்ற பலமான உறவை நமக்கு விளக்குகின்றார். அவர்களுடைய ஒருமைப்பாடு, அவர்களிடையே நிலவுகின்ற அன்பின் மூலமாக நமக்கு விளங்குகின்றது. அதேவிதமான அன்பை, கிறிஸ்துவுக்குள் வந்துவிட்டவர்களாகிய நமக்கும் பிதா அருளிச் செய்கிறார். கிறிஸ்துவில் இருக்கிறவர்களாகிய நாமும் அதேவிதமான அன்பை நமது திருமணத்தில் பிரதிபலிக்கிறவர்களாக இருக்க வேண்டும். திரித்துவ கடவுளிடையே இருக்கின்ற அன்பின் ஒருமைப்பாட்டைத்தான் நான் உங்களுக்கு சுட்டிக்காட்ட முடியும். அதை கவனத்தில் கொண்டு இயேசுவானவரின் வார்த்தையையும் கவனியுங்கள்.

நமக்கும் இயேசு கிறிஸ்துவுக்கும், பிதாவுக்கும் உள்ள ஐக்கியத்தை, ஒருமைப்பாடு என்கிற இந்த வார்த்தையின் மூலமாக இயேசுவானவர் விவரிக்கிறார். நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள். என் கற்பனைகளைப் பெற்றுக் கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான். என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான். நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் என்றார். ஸ்காரியோத்தல்லாத யூதா என்பவன் அவரை நோக்கி: ஆண்டவரே நீர் உலகத்துக்கு உம்மை வெளிப்படுத்தாமல் எங்களுக்கு உம்மை வெளிப்படுத்தப்போகிற காரண மென்ன என்றான். இயேசு அவனுக்கு பிரதியுத்தாரமாக: ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம். யோவான் 14:20-

*23. பிதாவோடு நாம் அடையக்கூடிய ஐக்கியத்தின் சந்தோஷத்தைக் குறித்து இயேசுவானவர் இங்கு குறிப்பிடு கிறார். அது, குமாரனாகிய இயேசு தன் பிதாவிடம் அனுபவிக்கின்ற சந்தோஷத்திற்கு ஒத்ததாய் இருக்கிறது.*

*பிதா, தம்மை நமக்கு வெளிப்படுத்தப் போகிறார் என்று இயேசுவானவர் நமக்கு அறிவிக்கிறார். அதுமாத்திரமல்ல, நாம் ஒருவரிலொருவர் வசிக்கக்கூடிய அனுபவத்தையும் பெறப்போகிறோம் என்று குறிப்பிடுகிறார். அது, அவர் நம்மிலும் நாம் அவரிலும் இருக்கக்கூடியதான அனுபவம். இயேசு மீண்டுமாக ஓர் ஒருமைப்பாட்டை விவரிக்கிறார்: அது அநேகமாயிருந்தும் ஒன்றாயிருக்கக்கூடிய ஒருமைப் பாடு. பிதாவும், குமாரனும், பரிசுத்த ஆவியானவரின் கிரியையினால், நம்மோடு வந்து ஒன்றாக சேர்ந்து இருக்கப் போவதான ஒருமைப்பாடு. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் அவருடைய சீஷர்களும் ஒன்றா யிருக்கிறார்கள். கர்த்தர், பரிசுத்த ஆவியின் உதவியால் சீஷருடைய உள்ளத்திற்குள் ஊடுருவி, அவனது ஆத்துமாவைத் தொடக்கூடியவராக இருக்கிறார். அவருடைய சீஷனாகிய நான் அவரது அன்பை ஏற்றுக் கொண்டு, அதற்கு பதிலளிக்கும்விதமாக அவர் முன் ஒளிவுமறைவில்லாமலும், வெட்கப்படாமலும் இருக்கிறேன். அவர் முன்பாக நான் எதையும் ஒளிக்காமல், என் ஆத்துமாவை அவருக்குத் திறந்து காட்டுபவனாகவும், என் இருதயத்தின் அந்தரங்கத்தையெல்லாம் அவர் காணும்படிக்கு வெளிப்படையாகவும் நிற்கின்றேன். நான், எதையும் அவருக்கு மறைத்து வைக்கவில்லை; தடையாக இருக்கும் யாவற்றையும் உடைத்தெறிகிறேன்; தடங்கல்களையெல்லாம் முறித்துப் போடுகிறேன். நாங்கள் ஒருவரிலொருவர் ஈடுபாடுகொள்ளாதபடிக்கு எந்த காரியத்தையும் குறுக்கே வரவிடமாட்டேன். கிறிஸ்து என்னோடு இருக்கிறார் என்கிற சிந்தையை, அவருடைய சீஷனாகிய நான் என்னில் வளர்த்துக் கொண்டே வருகிறேன். தனியாக இருப்பவனாக அல்ல,*

*அவர் என்னில் இருப்பதால் அவரோடுங்கூட சேர்ந்து இந்த சிந்தையை வளர்க்கிறேன். பரிசுத்த ஆவியானவரின் உதவியைக் கொண்டு, கிறிஸ்துவோடு நான் எப்போதும் ஐக்கியத்தில் இருக்கிறேன் என்பதை உணர்ந்தவனாகவே நான் வாழ வேண்டியதாயிருக்கிறது. அவர் பிரசன்னத்தை எப்போதும் உணர்ந்து அறிந்திருக்கிறவனாக நான் ஜீவிக்க வேண்டியதாயிருக்கிறது. நான் அவரில் இருக்கிறேன், அவர் என்னில் இருக்கிறார். நாங்கள் எப்போதும் சேர்ந்தே இருக்கிறோம். என்னோடு கூடவே வசிக்கின்ற அவருக்கும் எனக்குமுள்ள தொடர்பை நான் நினைக்காமல் இருந்தால் நான் என்னைக் குறித்தே சரியாக அறியாதவனாக இருப்பேன்.*

*இதே விதமான ஐக்கிய நிலைதான் திருமணத்திலும் இருக்க வேண்டும் என்று இயேசு கூறுகிறார். இதை, பக்திக்குரியதாக இல்லையே என நினைப்பதற்கில்லை. அவர் என்னை அறிந்திருப்பதைக் குறித்தும், என்னில் அன்புகூருவதைக் குறித்தும் பேசுகிறார்; அது, என் மனைவியை நான் எவ்விதத்தில் அறிந்து அவளை எப்படி நேசிக்க வேண்டும் என்பதை எனக்கு ஞாபகப் படுத்துவதாயிருக்கிறது. திருமணமானவனாகிய நான், என் மனைவியையும் கருத்தில்கொள்ளாமல் என்னைப் பற்றி மாத்திரம் குறிப்பிடுவேனானால் அது என்னை முழுமனிதனாக காண்பிக்காது. இருவருமாக சேர்ந்த ஒரு நிலைமையை நான் என்னில் வளர்த்துக்கொள்ள வேண்டும். "நான்" என்கிற விதத்தில் நான் செயல்படக் கூடாது; "நாங்கள்" என்கிற விதத்தில்தான் நான் செயல்பட வேண்டும். நான் எதை செய்தாலும் அவளோடு சேர்ந்து ஒருமித்துதான் அதை செய்ய வேண்டும். நான் என் மனைவியோடு ஒரே மாம்சமாயிருக்கிறேன். அவள் தன்னுடைய வாழ்க்கையை என்னில் வாழ்கிறாள்; நானும் என் வாழ்க்கையை அவளில் வாழ்கிறேன். இந்தவிதமாக ஒருவரில் ஒருவராக இருப்பது திரித்துவ கடவுள் மாத்திரம்தான்.*

*திருமணத்தில் அடங்கியிருக்கும் ஆவிக்குரிய, தெய்வீகத் தன்மைவாய்ந்த காரியங்களை அலசி ஆராய முற்படும்போது நாம் கடவுளின் மறைபொருள்களை அறிந்துகொள்ளக் கூடியவர்களாகிறோம். என்னுடைய திருமண வாழ்க்கை கடவுளின் தன்மைகளை வெளிப் படுத்துவதாயிருக்கிறது. என் திருமணம், என்னுடைய இறை நம்பிக்கையை வெளிப்படுத்துவதாயிருக்கிறது. என்னுடைய திருமணத்தில் வெளிப்பட வேண்டிய தன்மைகளை, திரித்துவ கடவுளிடம் காணப்படும் தன்மைகளே தீர்மானிக்கிறது. நான் என் மனைவியோடு பலவிதங்களில் ஒன்றுபடுவது, கடவுளோடு ஒன்று படுதலுக்கு அடையாளமாயிருக்கிறது. என்னுடைய திருமணம் தெய்வீகமானதென்றோ என் மனைவி ஒரு கடவுள் என்றோ நான் கூறவில்லை. அவளை நான் ஆராதிக்கிறேன் என்றும் கூறவில்லை. அவளுடைய படத்துக்கு முன்னால் மெழுகுவர்த்திகளை ஏற்றி வைத்து நான் வணங்கிக் கொண்டிருக்கவில்லை. ஆனால் வேதாகமத்துக்குக் கீழ்ப்படிந்து நான் அவளோடு ஒன்றுபடும்போது, ஒரு கணவனாக, திருமணத்தைக் குறித்த கடவுளுடைய திட்டத்தோடு ஒன்றுபடுகிறவனாகிறேன். கடவுளோடுள்ள ஆழமான ஐக்கியத்தின் விளைவாகத்தான் அவருடைய திட்டங்களுக்கு முழுமனதாக செவிசாய்க்க முடிகிறது. கடவுளின் சாயலாக படைக்கப்பட்டிருக்கும் என் மனைவியோடு ஒன்றுபடும்போது, திருமணத்தைக் குறித்த கடவுளுடைய திட்டத்தோடும் நான் ஒன்றுபடுகிறேன். நான் என் மனைவியோடு ஒன்றுபடுதல் தெய்வீகத்தன்மை வாய்ந்த முக்கியமான ஒன்றுபடுதலாகும்.*

*நாம் தெய்வீகப்பிறவிகளாகும்: கடவுளின் சாயலில் படைக்கப்பட்டவர்கள். வித்தியாசமான நிலையில் ஆணாகவும் பெண்ணாகவும் படைக்கப் பட்டிருந்தபோதிலும், நாம் கடவுளை வெளிப்படுத்து கின்ற படைப்புகளாம், ஆணாகவும் பெண்ணாகவும்,*

*கணவனாகவும் மனைவியாகவும் நாம் அவருடைய சாயலைத் தரித்தவர்களாக இருக்கிறோம். கடவுளின் பெரிதான கிருபையால் நாம் அவரை அறிந்து கொண்டு, அவரை நேசிக்கக் கற்றுக் கொண்டிருக்கிறோம். கடவுள் மீது நாம் கொண்டிருக்கும் அன்பு, நமது துணையோடு நம்மை ஒன்றாகச் செய்வதாயிருக்கிறது; ஏனென்றால பலராயிருந்தாலும் ஒன்றாயிருக்கின்ற கடவுளின் நிலையை நாம் பிரதிபலிக்கிறவர்களாக இருக்க வேண்டும் என்பதை அது நமக்கு ஞாபகப்படுத்திக் கொண்டேயிருக்கிறது. அவர் தம்மிலும் நம்மிலும் அன்புகூருகிறவராயிருக்கிறபடியால், நாமும் அவரிலும் நமது துணையினிடத்திலும் அன்புகூருகிறவர்களாய் இருக்க வேண்டும். நாம் ஒரே மாம்சமாயிருக்க வேண்டும் என்கிற இந்த இரகசியத்தை அறியும்படிக்கு அவர் நம்மை வழிநடத்திக் கொண்டு வந்திருக்கிறார். திருமணத்தில் நாம் ஐக்கியமாக இருப்பதின் மூலமாக நாம் அவரை மகிமைப்படுத்துகிறவர்களாக இருக்கிறோம்; திரித்துவமாயிருந்தும் ஒன்றாயிருக்கின்ற கடவுளின் பெரிதான இரகசியத்தையும் உலகிற்கு வெளிப்படுத்து கிறவர்களாய் இருக்கிறோம். நான் எந்தளவுக்கு என் மனைவியோடு ஆவிக்குரிய பிரகாரமாகவும், சரீரப் பிரகாரமாகவும் ஐக்கியமாக இருக்கிறேனோ அந்தளவுக்கு நான் கடவுளை மகிமைப்படுத்துகிறவனாக இருக்கிறேன்.*

# அத்தியாயம் 2

## படைப்பின் தத்துவம், தாம்பத்திய உறவின் நெருக்கத்திற்கு வழிகாட்டுகின்றது.

### படைப்பின் இன்றியமையாத தேவைகள்

*நாம் நட்போடு இருக்கும்படிக்கே தேவன் நம்மை படைத்திருக்கிறார். படைக்கப்பட்ட எந்த காரிய*

மும் தன்னில்தானே இயங்குவதோ, தனிமையாக இருப்பதோ கடவுளின் படைப்பின் தத்துவத்திற்கே முரண்பாடானது. அனைத்து படைப்புகளும் ஒன்றையொன்று சார்ந்திருக்கத்தக்க வகையில் ஓர் அழகான துணியைப் போல நெய்யப்பட்டுள்ளது. நூலானது ஒன்றையொன்று ஊடுருவி நேர்த்தியான சால்வையாக உருவாகிறது. அது போல, அனைத்து படைப்புகளும், தாங்கள் மற்ற படைப்புகளிடமிருந்து ஏதோவொன்றைப் பெற்றுக்கொள்வதும், தானும் பிறவற்றிற்கு ஏதோவொரு வகையில் பிரயோஜனமாக இருக்கும்படிக்கும் கடவுள் அவைகளை அமைத்துப் படைத்திருக்கிறார். அவ்வகையில் படைப்புகள் யாவும் ஒன்றோடொன்று தொடர்புள்ளவையாகவும், ஒன்றிற்கொன்று உதவிக்கொள்பவையாகவும் இருக் கின்றன. படைப்பில் எதுவுமே தனித்து இயங்குவதில்லை. ஒவ்வொரு காரியமும், மற்ற ஒரு காரியத்தை சார்ந்து இயங்கும்படியாகத்தான் கடவுள் படைப்பிலுள்ள அனைத்தையும் படைத்திருக்கிறார். தாவரவியல், வேதியியல், பௌதீகம், சமூகவியல் இப்படியாக எந்தக் காரியத்தை எடுத்துக் கொண்டாலும் அதிலுள்ள காரியங்கள் ஒன்றையொன்று சார்ந்து இருப்பதை நாம் பாடங்களின் மூலமாக விளங்கிக்கொள்கிறோமல்லவா! படைப்பிலுள்ள ஒவ்வொரு காரியமும் ஒன்றையொன்று ஈர்க்கும் வகையிலும், ஒன்றோடொன்று சம்பந்தப் படும் வகையிலுமாக வெகு நேர்த்தியாக படைக்கப் பட்டிருக்கிறது.

ஒரு நேர்த்தியான சால்வையில் ஒவ்வொரு நூலும் மற்றொரு நூலை ஊடுருவி அழகாக நெய்யப் பட்டிருப்பதைப் போல, கடவுளின் படைப்பிலுள்ள அனைத்து காரியங்களும் அதனதன் நிலையிலே செயல்படும்போது அழகான வாழ்க்கைமுறை உருவாகிறது. படைப்பிலுள்ள ஒவ்வொன்றும் கடவுள் நியமித்த வகையில் ஒன்றிற்கொன்று உதவியாக

இருந்து செயல்படுகிறது. இவ்விதமாக கடவுள் இந்த பூலோக படைப்புகள் அனைத்தையும் ஒன்றையொன்று சார்ந்திருக்கும் விதமாக படைத்து வாழ்க்கையை உருவாக்கியிருக்கிறார். உருவாக்கப்பட்டிருப்பவைகளில் காணப்படும் ஒழுங்கு, பலவிதமான தன்மைகள், ஒற்றுமை இப்படியாக தேவன் படைப்பை அமைத்திருப்பதில் அவை யாவும், அவரையும் அவருடைய மகிமையையும் வெளிப்படுத்துகிறது.

படைப்பின் ஒவ்வொரு பாகமும் கடவுளின் திட்டத்தை உணர்ந்து, கடவுள் நியமித்த ஒழுங்கில் தன்னை பொருத்திக்கொள்ள வேண்டியது அவசியம். ஒவ்வொன்றும் தனக்கு அவசியமானதை மற்ற பாகங்களிலிருந்து அடைந்துகொள்ளவும், பிறவற்றிற்கு தேவையானதை, தான் அவைகளுக்குக் கொடுக்க வேண்டியதுமாக தேவன் அவைகளை உருவாக்கியிருக்கிறார். இப்படியாக பல்வேறு படைப்புகளும் ஒன்றிற்கொன்று உதவிக்கொண்டு வாழ்க்கை சக்கரத்தை சுழல வைக்க வேண்டுமென்பது கடவுளின் திட்டம். இப்படியாக அவை மற்றதின் தேவைகளை நிறைவேற்ற வேண்டியிருப்பது, படைப்பில் ஏதோ தவறுதல் நேர்ந்துவிட்டதாலும் அல்ல, பாவத்தில் முழு உலகமும் கறைபட்டுவிட்டதாலும் அல்ல. படைப்பிலுள்ள அனைத்தும் தனது தேவையையும், மற்றவற்றின் தேவையையும் கருத்தில் கொண்டு வாழவேண்டும் என்பதற்காகத்தான் கடவுள் அனைத்து படைப்புகளும் பரஸ்பர உதவிகளைப் பெற்றுக் கொண்டு இயங்கத்தக்க வகையில் உருவாக்கி, வாழ்க்கையெனும் அழகிய சால்வையை அவை ஒன்றையொன்று ஊடுருவி வாழத்தக்க வகையில் உருவாக்கியிருக்கிறார். எவற்றையெல்லாம் அவர் இணைத்திருக்கிறாரோ, அவை தமது தேவைகள் யாவையும் பரஸ்பரமாக நிறைவேற்றிக்கொள்கின்றன. படைப்பிலுள்ள அனைத்தும் இவ்விதமாக ஒன்றிற்கொன்று பரஸ்பர

உதவிகளை நிறைவேற்றிக்கொள்ளத்தக்க வகையில் தேவன் அவைகளை இணைத்திருக்கிறார். "படைப்பின் தேவைகள்" என்னவாயிருந்தது என்பதைக் குறித்து நாம் சிந்திக்கலாம். படைப்பிலுள்ள யாவும் மற்றவற்றோடு ஏதாவதொரு வகையில் தொடர்பு கொண்டுள்ளது. தனக்குரிய நிலையில் இருந்து கொண்டு மற்றவற்றோடும் சேர்ந்து, தேவனுடைய திட்டத்திற்கேற்ப செயல்பட வேண்டிய "தேவை" ஒவ்வொன்றிற்கும் இருக்கிறது.

ஆதி. 1:2 ல் நாம் மூன்று "படைப்பின் தேவைகளைப்" பார்க்கிறோம். அந்த தேவைகளை தேவன் படைப்பின் முதலாம் வாரத்தில் நிறைவேற்றினார். பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாயிருந்தது. ஆழத்தின் மேல் இருள் இருந்தது. தேவஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக் கொண்டிருந்தார். மோசே இவ்விடத்தில் மூன்று "படைப்பின் தேவைகளைக்" குறிப்பிடுகிறார். அவை, ஒழுங்கின்மை, வெறுமை, இருள். ஒழுங்கற்ற தன்மையிலிருந்த உலகம், ஒழுங்காக்கப்பட வேண்டிய தேவை இருந்தது; வெறுமையான உலகம் நிரப்பப்பட வேண்டிய தேவை இருந்தது; இருளான உலகிற்கு வெளிச்சம் ஏற்பட வேண்டிய தேவை இருந்தது. ஆகவே புதிதாக உருவாகப்போகிற படைப்புக்கு, வெளிச்சமும், ஒழுங்கும், குடிமக்களும் ஏற்பட வேண்டிய மூன்று தேவைகள் இருந்தது. படைப்பின் அனைத்து தேவைகளையும், தேவன் படைப்பின் முதலாம் வாரத்திலே நிறைவேற்றினார். முதலாவதாக, அவர் வெளிச்சத்தை ஏற்படுத்தி, இருளின் தேவையை பூர்த்தி செய்தார். அடுத்தபடியாக பூமியின் எல்லைகளை வரையறுத்ததில் அவர் ஒழுங்கு ஏற்படவேண்டியதின் தேவையையும் நிறைவேற்றினார். கடைசியாக, வெறுமையாக இருந்த இவ்வுலகில் குடிமக்களையும் ஏற்படுத்தி அதன் மூலமாக வெறுமையின் தேவையையும் சந்தித்தார்.

## மனிதனின் உழைப்பு உலகத்திற்கு தேவை

*ஆதி. 1:1-ல் இருந்து 2:4 வரையுள்ள பகுதியில் படைப்பைக் குறித்த ஒரு முகவுரையாக மோசே எழுதியிருக்கிறார். ஆதி. 2:5 முதல் 5:1 வரையுள்ள பகுதியில் மனிதனின் வீழ்ச்சியைக் குறித்து எழுதுகிறார். 2ஆம் அதிகாரத்தில் மனிதனின் வீழ்ச்சிக்கு முந்தைய காலங்களை நமக்கு விவரித்துக் காண்பிக்கிறார். இக்காலகட்டங்களில் ஆதாம் தேவசாயலைக் கொண்டவனாக ஏதேன் தோட்டத்தில் தனிமையில் வசித்து வந்ததை மோசே எழுதுகிறார். (தனிமையான வாழ்க்கையைத் தெரிந்துகொண்டிருக்கிற ஆணோ அல்லது பெண்ணோ, அவர்களும் தேவசாயலை உடையவர்கள்தான் என்பதை இங்கு உணரமுடிகிறது. ஆதியாகமம் 2ம் அதிகாரத்தில் நாம் காண்கிற ஆதாமின் வாழ்க்கையை ஆராய்வதின் மூலமாக தனித்து வாழ்கின்ற விசுவாசிக்கு நல்ல பாடங்கள் கிடைக்கும். ஆதாம் நல்ல முதிர்ச்சி பெறுகின்ற வேளையிலே அவருக்கு தேவன் பலவிதமான பொறுப்புகளை அளிக்கிறார். அவனுக்கு படைப்புகளின் மீதும், வார்த்தைகளைக் கையாளுவதிலும், கடவுளைத் தொழுதலிலும், மற்றவற்றின் மீதும் பொறுப்புகள் கொடுக்கப்படுகிறது.) ஏவாளை தேவன் உருவாக்குவதற்கு முன்னதாகவே மனிதன் பூமியையும் அதிலுள்ள சகல ஜீவராசிகளையும் ஆளுகிறவனாக* (Leadership) *காணப்படுகிறான். ஏவாளின் வருகைக்குப் பின்னும் அவனுடைய அந்த ஆளுகை தொடர்கிறது. பிறகாலங்களில் அது தலைமைபதவியென* (Headship) *அழைக்கப்பட்டது. இந்த சந்தர்ப்பத்தில் நாம் கவனிக்க வேண்டியது மனிதனும் ஒரு "படைப்பின் தேவை"யை சந்திக்கின்றான். இதை தேவனே ஏற்படுத்துகிறார். படைப்பின் தேவைக்காக மனிதனை கடவுள் உருவாக்குவதாக ஆதி. 2:5,6ல் பார்க்கிறோம், நிலத்தினுடைய சகலவித செடிகளும் பூமியின்மேல் இன்னும் உண்டாகவில்லை,*

*நிலத்தினுடைய பூண்டுகளும் இன்னும் முளைக்கவில்லை; ஏனெனில் தேவனாகிய கர்த்தர் பூமியின்மேல் இன்னும் மழையைப் பெய்யப்பண்ணவில்லை; நிலத்தைப் பண்படுத்த மனுஷனும் இருந்ததில்லை. அப்பொழுது மூடுபனி பூமியிலிருந்து எழும்பி, பூமியையெல்லாம் நனைத்தது.*

மனிதனின் உழைப்பு உலகத்திற்குத் தேவை என்கிற விதத்தில் தேவன் உலகை படைத்திருக்கிறார். அப்போது நிலத்தை பண்படுத்த ஒரு மனிதனும் உலகில் இருக்கவில்லை. கடவுள், உலகத்தினுடைய இந்த தேவையையும் சந்தித்தார். அதை 15ஆம் வசனத்தில் காண்கிறோம். தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக் கொண்டு வந்து, அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார். மனிதனுடைய உழைப்பின் தடங்களை ஏற்கும்படியாகத்தான் தேவன் இந்த பூமியைப் படைத்திருந்தார். மனித நடமாட்டம் இல்லாத இடங்கள் பாழ்நிலங்களாக தரிசுநிலங்களாக இருப்பதைக் காண்கிறோமல்லவா! சகலத்தையும் படைத்த கடவுளுடைய சாயலைத் தரித்துக் கொண்டிருக்கிறவனாகிய மனிதன், ஒரு சிறந்த உழைப்பாளியாக பூமியில் செயல்பட்டபோது, அந்த பூமியும் அவனுடைய வாழ்க்கைக்குத் தேவையான சகல கனிவகைகளையும் தந்தது. 5ம் வசனத்திலும் 15ஆம் வசனத்திலும் மோசே நிலத்தைப் பண்படுத்த என்கிற ஒரே வார்த்தையை உபயோகித்திருக்கிறார். அத்தோடுகூட மனிதன் நிலத்தை காக்கவும் வேண்டும். மனிதன் தன்னுடைய உழைப்பின் மூலமாக பூமியோடு ஒன்றியிருக்கிறான். படைப்பின் தத்துவத்தில் அவனும் பூமியோடு இணைந்து அழகாக நெய்யப்பட்டிருப்பதை உணருகிறோமல்லவா! இன்னும் சொல்லப்போனால், அவன் பூமியோடு தொடர்புள்ளவனாக இருந்ததால்தான் அவன் மனிதன் என்கிற பெயரையே பெற்றான். தேவன் அவனுக்கு ஆதாம் என்று பெயரிட்டிருந்தார்.

அதற்கு “சிகப்பு மணல்” என்று அர்த்தமாம். கடவுள் மனிதனை உலகோடு இணைக்கிறார். அவன் வாழ அவனுக்கு பூமி தேவைப்படுகிறது; பூமிக்கும் அவனுடைய உழைப்புத் தேவைப்படுகிறது. பூமியின் மீதில் அவனுக்கு வாழ்க்கைக்குரிய இணைப்பு இல்லாவிட்டால், கடவுள் அவனை எதற்காக படைத்தாரோ அந்த நோக்கம் செயல்படாது. தன்னுடைய உழைப்பின் மூலமாக அவன் பூமியோடு இணைப்பை ஏற்படுத்திக்கொள்ளுகிறான். மனிதனுடைய உழைப்பின் தடங்களை பூமியும் தன்னில் வெளிப்படுத்துகிறது. கடவுளின் சாயலைக் கொண்ட மனிதன், கடவுள் தனக்கு நியமித்த நிலையில் இருந்து கொண்டு அவர் குறித்த வேலையை செய்கிறவன் ஆனான். அதன் பலாபலனானது ஒழுங்கையும், ஒற்றுமையையும் படைப்புகளிடையே ஏற்படுத்தி கடவுளின் மகிமையை வெளிப்படுத்திக் காண்பிக்கிறதாயிற்று.

வெளிச்சம், எல்லைகள், குடிமக்கள் ஆகியவற்றை ஏற்படுத்தியதின் மூலம் ஆரம்பத்தில் இருந்த படைப்பின் தேவைகள் பூர்த்தியாயிற்று. மண்ணின் தேவைக்கு மனிதன் ஏற்படுத்தப்பட்டதில் அதன் தேவைகள் நிறைவேறிற்று. இப்போது மனிதனுக்கும் ஒரு தேவை இருப்பதை வேதாகமத்தின் மூலமாகத் தெரிந்துகொள்ளுகிறோம். அவனுக்குத் துணையாக ஒரு பெண்ணை படைத்ததின் மூலமாக தேவன், மனிதனின் தேவைகளையும் நிறை வேற்றினார்.

## ஆணுக்கு பெண் தேவை

ஆதி. 2:18ல் படைப்பில் மனிதனுக்கு எது தேவையாக இருந்தது என்றும், அதை மனுஷியை உருவாக்கியதின் மூலம் கடவுள் நிறைவேற்றினதையும் காண்கிறோம். பின்பு தேவனாகிய கர்த்தர் . . . நல்லதல்ல . . . என்றார். நாம் இந்த வசனங்களை பலமுறை படித்திருப்போம். மேற்கொண்டு வாசிக்கும்படி கடந்து சென்றிருப்போம்.

*ஆனால் ஒரு நிமிஷம் நின்று கவனியுங்கள். ஏதோ அசம்பாவிதமாக இது சொல்லுகிறதே. இது நமது கவனத்தை சுண்டி இழுக்கிறது. மோசே என்ன சொல்ல வருகிறார்? ஏதோ ஒன்று நல்லதல்ல என்று கூறுகிறாரே! முதலாம் அதிகாரத்தில் ஏழு முறை தேவன் அது நல்லது என்று கண்டார் என்று வாசிக்கிறோம். எல்லாவற்றிற்கும் சிகரம் போல ஆதி. 1:31 ஆம் வசனத்தில் அது மிகவும் நன்றாயிருந்தது என்றும் வாசிக்கிறோம். தொடர்ந்து 2 ஆம் அதிகாரத்தை வாசித்துக் கொண்டு வருகையில் 18 ஆம் வசனத்தில் ஒரு பேரிடி! ஏதோ ஒன்று நன்றாக இல்லை என்கிறதைப் படிக்கிறோம். அது நம் மகிழ்ச்சியை சிதைக்கிறதே!*

*எது நன்றாக இல்லை? மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார். தனிமையாயிருந்த மனிதன், ஏற்கனவே சகலத்தையும் ஆண்டுகொள்ளுகிறவனாய் ஆதி. 1:28ல் சொல்லியபிரகாரமான கட்டளையை நிறைவேற்றுகிறவனாய் இருந்தான். பூமியின் மீது அதிகாரத்தை செலுத்துகிறவனாய் இருந்தான். பூமியை பண்படுத்தி, அதைக் காத்துக்கொள்வதின் மூலமாக அவன் பூமியில் தனது ஆதிக்கத்தை செலுத்திக் கொண்டிருந்தான். மனிதன் தன்னுடைய அதிகாரத்தை உழைப்பின் மூலமாக மாத்திரமல்லாது, தனது வார்த்தையினாலும் செலுத்துவது அவசியமாயிருந்தது. ஆகவே கடவுள் சகல மிருகஜீவன்களையும் அவனிடமாக அழைத்துக் கொண்டுவந்தார். அப்போது அவன் பாவமற்ற நிலையில் இருந்தான். தன்னைப் படைத்தவராகிய கடவுளைக் குறித்து இன்னும் அவனுக்கு பூரணமான அறிவு இல்லாதிருந்த நிலையிலும், அவன் கடவுளுடைய வார்த்தைகளையும், அவருடைய செயல்களையும் புரிந்துகொள்ளக்கூடியவனாக இருந்தான். கடவுளுடைய செயல்கள் வெளிப்படையாக இருந்தன. அவருடைய செய்கைகளுக்கு அர்த்தம் என்னவென்பதை அவன்*

சரியாக விளங்கிக் கொண்டான். கடவுளின் சாயலைத் தரித்துக் கொண்டிருக்கிறவனாகிய மனிதன், அவரை மாதிரியாகக் கொண்டு செயல்பட வேண்டியதாயிருந்தது. கடவுள் மிருகங்களை அவனிடம் கொண்டுவந்தபோது, அவன் என்ன செய்ய வேண்டுமென்று அவர் எதிர் பார்த்தாரோ அதையே அவன் செய்தான். அவற்றிற்கு பெயர்களைக் கொடுத்ததன் மூலமாக அவன் அவைகளை ஆண்டுகொள்கிறவனாக செயல்பட்டான். தன்னுடைய ஆளுகைக்கும் நிர்வாகத்துக்கும் கீழே தேவன் அந்த மிருகஜீவன்களை வைக்கிறார் என்பதை அவன் உணர்ந்து கொண்டான். தனது பொறுப்பை உணர்ந்து கொண்டவனாக அவைகளுக்கு பெயர் வைக்கிறான். தன்னைப் படைத்தவராகிய பிதாவானவர் வார்த்தையின் மூலமாக சகலத்தையும் உண்டாக்கி . . . சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய் . . . (எபி. 1:3) இருப்பது போல, மனிதனும் தனது வார்த்தையினாலே சகல ஜீவராசிகளுக்கும் உரிய பெயர்களை படைத்தான். கடவுளுடைய வார்த்தைகளில் தொனித்த அதிகாரம் மனிதனின் வார்த்தைகளிலும் தென்பட்டது. அந்தந்த ஜீவஜந்துக்கு ஆதாம் எந்தெந்தப் பெயரிட்டானோ அதுவே அதற்குப் பெயராயிற்று. ஆதாம் பெயரிட்ட மிருகஜீவன்களின் பெயர்கள் மாற்றப்படவில்லை. இப்படியாக அவன் சகலத்தையும் ஆண்டுகொண்ட போதிலும், அது அவனுடைய தனிமையை இன்னும் அதிகப்படுத்தியது. அவைகளினிடையே அவனுக்கேற்ற துணை இன்னும் காணப்படவில்லை.

## மனிதன் மனுஷிக்குப் பெயரிட்டான்

மனிதனுடைய தேவை இன்னும் தீவிரமானது. அவன் தனிமையாக இருப்பது நல்லதல்ல. ஆகவே அவனுக்கேற்ற துணையை உருவாக்குவதன் மூலமாக தேவன் அவனுடைய தேவையை நிறைவேற்றினார்.

*மனுஷி அவனுக்குத் தகுந்த துணையாக இருந்து, கடவுளின் சாயலைத் தரித்துக் கொண்டிருக்கிற அந்த மகத்தான படைப்புகளின் நோக்கத்தை நிறைவேற்றி, கடவுள் நெய்த வாழ்க்கையாகிய சால்வையில் தங்கள் பங்கை நிறைவேற்றுகிறார்கள். கடவுள் மனுஷியை அவனிடம் கொண்டு வந்தபோது, அவன் கடவுள் தன்னிடம் என்ன எதிர்பார்த்தாரோ அதையே செய்ததின் மூலமாக கடவுளின் சாயலை தன்னில் வெளிப்படுத்துகிறான்; தனது ஆளும் தன்மையில் அவரது சாயலை பிரதிபலித்தான். அவளுக்கு பெயரிட்டதின் மூலமாகவும், அதிகாரங்களையும் பொறுப்புகளையும் அவளுக்கு பகிர்ந்து அளித்ததின் மூலமாகவும் வார்த்தையினால் அவன் தன் ஆளுமையை வெளிப்படுத்தினான். கடவுள் அவளைத் தன்னிடம் அழைத்து வந்ததுமே அவன் அவளுக்குப் பெயரிட்டான். தனது வார்த்தையின் மூலமாக அவள் உருவாக்கப்பட்டதன் நோக்கத்தையும், அர்த்தத்தையும், விளக்கத்தையும் தெரியப்படுத்துகிறான்: இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியால் மனுஷி என்னப்படுவாள்.*

*மனுஷி சரீரப்பிரகாரமாக மனுஷனோடு பொருந்தி யிருப்பதை இவ்வசனத்தில் கவனியுங்கள். அவள் சரீரப்பிரகாரமாக தன்னோடு பொருந்தியவள் என்பதை ஆதாம் இவ்விடத்தில் விளக்குகிறார். இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள். அவள் ஆதாமிலிருந்து தனிப்பட்டு இன்னொரு உருவமாக இருந்தாலும், அவள் அவனிலிருந்தே எடுக்கப்பட்டு வேறுவிதமாக படைக்கப்பட்டவள். கடவுள் ஆதாமின் விலா எலும்பு ஒன்றை எடுத்தார். அதைக் கொண்டு ஒரு பெண்ணை வடிவமைத்தார். தான் வடிவமைத்த அந்த பெண்ணைத் திரும்பவும் அவனிடமே கொண்டு வந்து அவனிடம் ஒன்று சேர்க்கிறார். அவள் தன்னில்தானே*

சுயாதீனமுடையவள்தான், ஆனால் அதே சமயத்தில் அவனோடும் சேர்க்கப்பட்டிருப்பவள். அவனோடு இசைவாக இருக்கும்படிக்கு ஏற்படுத்தப்பட்ட தனிப்பட்ட பிறவி அவள். அவனுடைய எலும்பையும் மாம்சத்தையும் கொண்டு உருவாக்கப்பட்டவள். ஆதாமிடம் வெளிப்பிரகாரமாக ஒட்ட வைக்கப்படும் வகையில் பிற்பாடு ஏற்படுத்தப்பட்ட ஒரு படைப்பல்ல அவள். தேவன் அவளை அவனிடமாக கொண்டுவந்து சேர்த்தது, அவளைத் திரும்பவுமாக ஆதாமின் விலாவிலே வைப்பதற்கு ஒப்பானதாக இருக்கிறது. இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள். ஆதாம் கூறிய இவ்வார்த்தையில், திரித்துவ கடவுளிடையே நிலவுகின்ற ஒப்பற்ற ஐக்கியத்தின் தன்மை எதிரொலிக்கிறது. பலராயிருந்தும் ஒன்றாயிருக்கிற திரித்துவ கடவுளின் நாமம் இங்கு மகிமைப்படுகிறது: அவள் மனுஷி எனப்படுவாள்.

மனிதன் என்பதின் பெண்பால் வார்த்தை மனுஷி யாகும். சம உரிமை கோருகின்ற பெண்கள் கூட்டத் தார், எங்களை அப்படி அழைக்கக்கூடாது, வேறு வார்த்தைகளால் அழைக்கப்பட வேண்டும் என்று போராடுகின்ற கருத்துக்கு இது முரணானது. . . . அந்தந்த ஜீவஜந்துக்கு ஆதாம் எந்தெந்தப் பெயரிட்டானோ அதுவே அதற்குப் பெயராயிற்று. கடவுள் தனக்கு அளித்த அதிகாரத்தினிமித்தம், ஆதாம் அவளை மனுஷி என்று அழைத்தபடியால் அதுவே அவளது பெயராயிற்று. கடவுளைப் போன்றே அன்பின் அதிகாரம் செலுத்துகிறதில் அவனது ஆண்தன்மை மிளிருகிறது. அவளைக் குறித்து பூரணமாக அறிந்தவனாக, தங்களுடைய ஐக்கிய நிலையின் தத்துவத்தை உணர்ந்தவனாக அவன் அவளை அவ்வாறு விவரிக்கிறான். பூரணமான ஐக்கியத்திற்கென அவர்கள் படைக்கப்பட்டவர்கள். சரீரப்பிரகாரமான நெருக்கத்துடன், ஒரே மாம்சமாகின்ற நிலைமைக்கென அவர்கள் உருவாக்கப்பட்டிருக்கிறார்கள்.

*நமது முதல் பெற்றோரை மோசே அவர்களுடைய தெய்வீக ஐக்கிய நிலையிலே மனக்கண்களால் கண்டு, இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள். ஆதாமும் அவன் மனைவியுமாகிய இருவரும் நிர்வாணிகளாயிருந்தும், வெட்கப்படாதிருந்தார்கள் என்று கூறுகிறார் (ஆதி. 2:24-25).*

## தேவன் இணைத்தது !

*திருமணத்தில் காணும் ஐக்கியத்தைவிட உயர்வான தாக ஒரே ஓர் ஐக்கியத்தைதான் இயேசு கிறிஸ்து குறிப்பிடுகின்றார். அது என்னவெனில், அவர் நம்மை அவருடைய சீஷராகும்படி அழைக்கும்போது எதிர்பார்க்கின்ற ஐக்கியம். மற்ற எந்த உறவைக்காட்டிலும் இயேசுவுக்கும் நமக்குமுள்ள ஐக்கியம் அதிகமானதாக இருக்க வேண்டுமென அவர் கூறுகிறார். திருமண வாழ்க்கை, ஆவிக்குரிய பக்தி நிலைக்கு ஒத்ததாயிருக்கிறது. தெய்வீக நம்பிக்கைக்கு "ஒரே கடவுள்" கோட்பாடு ஏற்புடையதாயிருப்பதுபோல, மனித உறவுகளுக்கு "திருமணம்" என்கிற கோட்பாடு சரியானதாக விளங்கு கின்றது. அது, ஒரே மேலான தெய்வீக அன்பை அடைவ தற்காக மற்ற எல்லாவற்றையும் விட்டு விலகிவிடு கின்றதான நிலைமைக்கு ஒத்ததாகும்.*

*மத். 19:4-6 வசனங்களில் இயேசு கிறிஸ்து திருமணத்தைக் குறித்து உபதேசிக்கும்போது அவர் ஆதி. 1:26ம் வசனத்தை மேற்கோள் காண்பிக்கிறார். முதலாவது அவர் . . . ஆதியிலே மனுஷரை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் என்பதை . . . நீங்கள் வாசிக்கவில்லையா? என்று கேட்கிறார். அடுத்தபடியாக அவர், ஆதி. 2:24ஐ குறிப்பிடுகிறார், இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத்*

தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். இதைக் கூறியதும் அவர் நடைமுறையில் செய்ய வேண்டியதையும் கூறுகிறார், ஆகையால் தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக் கடவன்.

கடவுள் ஏவாளை ஆதாமுக்கென உருவாக்கி அவனிடம் அழைத்து வந்தது எவ்வளவு நிச்சயமோ, அது போலத்தான் தேவன் நம் ஒவ்வொருவருக்கும் உரிய துணையை தமது திட்டத்தின்பிரகாரம் நிர்ணயித்து ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார். நாம் சிலவேளைகளில் நினைப்பதுண்டு: நான் வேறு யாரையாவது திருமணம் செய்திருக்க வேண்டுமோ? நான் இன்னும் அதிக சிநேகமாக இருக்கும்படிக்கு வேறு யாரையோ தெரிந்தெடுத்திருக்க வேண்டுமோ? இவ்விதமான கேள்விகள் எழுவது, தேவனுடைய தெய்வீக திட்டத்தையே அவமதிப்பதும், அன்பை புறக்கணிப்பதுமாகும். அன்பு செலுத்துவது என்பது நமக்கு கடவுள் கொடுத்திருக்கிற துணையை மாத்திரம் நோக்கி பார்வையை செலுத்துவதேயொழிய, துணைக்கு அப்பால் வேறு யாராவது தென்படுகிறார்களா என பார்வையை விரிவுபடுத்துவதல்ல. கடவுள் ஆதாமிடம் ஏவாளை அழைத்துக்கொண்டு வந்தது போல இந்த துணையையே உன்னை சந்திக்கச் செய்து, உன்னிடத்தில் அழைத்துக்கொண்டு வந்திருக்கிறார். நீங்கள் திருமணம் செய்தபோது, உங்களுக்குள்ளாக உறுதிமொழி எடுத்துக்கொண்டு திருமண ஒப்பந்தத்திற்குள்ளாக இணைக்கப்பட்டிருக்கிறீர்கள். நீங்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருக்கிறீர்கள். வேறு யாரையாவது திருமணம் செய்திருக்கலாமோ என நினைப்பது உண்மையான ஐக்கியத்திற்கு விரோதமாயிருக்கிறது. உண்மையான அன்பு அந்த கேள்வியையே கேட்காது. அதுவும் நீங்கள் உங்கள் துணையோடு ஒரே மாம்சமாக வாழ்ந்து கொண்டிருக்கையில், அப்படிப்பட்ட கேள்வி

*எழலாகாது. நீங்கள் ஒரே சரீரமாயிருக்கிறீர்கள்: ஒரு மனிதன், ஒரு மனுஷி, ஒரே வாழ்க்கை. உங்களுடையதோ அல்லது உங்கள் துணையுடையதோ, அந்த வாழ்க்கை முடியுமட்டும், ஒன்றேதான். மரணம் உங்களை பிரிக்குமட்டும் நீங்கள் இருவரும் ஒருவருக்கொருவர் ஐக்கியத்தில் நிலைத்திருக்கிறீர்கள். மரணம்! இதைக் குறித்து விரிவாக பேச வேண்டும். இது நம்மை மூன்றாவது வழிகாட்டும் நட்சத்திரக் குறிப்பிடம் அழைத்துச் செல்லுகிறது.*

# அத்தியாயம் 3

## வீழ்ச்சியின் சரித்திரம், தாம்பத்திய உறவின் நெருக்கத்திற்கு வழிகாட்டுகின்றது

### பிரிவினையை ஏற்படுத்திய மரணம்!

*ஆதி. 3ம் அதிகாரத்தில் பாவத்தின் காரணமாக மனிதனின் வீழ்ச்சி ஏற்பட்டு அவன் மரணத்திற்குள்ளான நிலையைக் காண்கிறோம். மரணத்தைக் குறித்து நாம் நன்கு அறிந்தவர்களாக வாழ்ந்து கொண்டிருந்தாலும், வேதாகமத்தின்படி மரணம் எதைக் குறிக்கிறது என்பதை ஒரு சிலரே அறிந்து வைத்திருக்கின்றனர். மரணம் என்பது ஒன்றுமேயில்லாமல் அழிந்து போய்விடுவது அல்ல. மாயமாய்ப் போய்விடுவதுமல்ல. ஒன்றுமில்லாமல் ஆவியாகி மறைந்து போய்விடுவதுமல்ல. மரணம் என்பது இல்லாமலே போய்விடுவதுமல்ல. பழங்காலத்தில் திருமணத்தின்போது கூறுகின்ற "மரணம் நம்மைப் பிரிக்கும் வரைக்கும்" என்கிற வார்த்தை வேதபூர்வமாக மரணத்தை விளக்குகின்றது எனலாம். மரணம் என்பது விடைபெறுதல், பிரிதல், விலகிச்செல்லுதல் ஆகிய அர்த்தங்களை உள்ளடக்கியது. படைப்புகளிடையே நிலவிய ஒன்றையொன்று சார்ந்திருக்கும் நிலையை*

மரணம் உடைத்தெறிகிறது. வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும் தொடர்புகளை மரணம் அறுத்துவிடுகிறது. கடவுள், அனைத்து படைப்புகளையும் ஒன்றோடொன்று இணைந்து, சார்ந்து இருக்கும்படியாக உருவாக்கினார். கடவுள் இணைத்ததை மரணம் பிரிக்கிறது. மரணம், சகலத்தையும் அதனதன் இடத்தைவிட்டு பிரித்து அப்புறப்படுத்துகிறது. கடவுள், ஒன்றாக இருக்கும் படியாக படைப்பில் இணைத்த சகலத்தையும், மரணம், அறுத்துவிட்டு அழிக்கிறது. வேதபூர்வமாக மரணத்தை விளங்கிக்கொள்ள வேண்டுமானால், மரணத்தை, பிரிவினையை ஏற்படுத்துவதாகவும், பிளவு உண்டாக்குவதாகவும், இணைப்புகளைத் தகர்த்துபோடு கின்றதாகவும் கற்பனை பண்ணிக்கொள்ள வேண்டும்.

பொய்காரனும், கொலைகாரனுமாகிய சாத்தான் ஆதிப்பெற்றோருக்கிடையே இருந்த நெருக்கமான நிலைமைக்குள் பிரவேசித்து, அவர்களை ஒருவரோ டொருவரிடமிருந்து பிரித்தது மாத்திரமல்ல, சகல படைப்புகளிடமிருந்தும், கடவுளிடமிருந்துங்கூட பிரித்துவிட்டான். நமது வாழ்க்கையில் நாம் சாத்தானின் செயல்களைக் குறித்து எப்போதாவதுதான் சிந்தித்துப் பார்க்கிறோம். நமக்கு வீழ்ச்சியின் “கதை” நன்றாகத் தெரிகிறது; ஆனால் பாவத்தைக் குறித்தும், அதன் ஆரம்பத்தைக் குறித்தும் சிந்திக்கையில், அதில் வஞ் சகனாகிய சாத்தானின் பங்கைக் குறித்து நாம் அதிகமாக நினைப்பதில்லை. நம்மையும் நமது திருமண வாழ்க்கையையும் அழித்துப் போட இன்றைக்கும் சாத்தான் தனது பொய்களாலும், மயக்கும் சூழ்ச்சிகளாலும் சதி செய்து கொண்டுதான் இருக்கிறான்.

மரணம் நமது வாழ்க்கையின் சகல காரியங்களிலும் எவ்விதமான பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறதென்று பாருங்கள். மரணம் மனிதனின் மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்திவிட்டது. அவனது அறிவிலும்

உணர்ச்சிகளிலும்கூட ஊடுருவி மாறுதல்களைத் தோற்று வித்துவிட்டது. அவனுக்குள்ளேயேகூட மரணத்தினால் ஏற்பட்ட பிரிவினைகளை உணருகிறான். நமது எண்ணங்களும் சிந்தனைகளும் இப்போது இருக்கிற மாதிரி, ஆதாமின் சிந்தனைகள், பாவத்தில் விழுவதற்கு முன்னால் இருந்திருக்காது. நமது மனதே, பாவத்தினால் வீழ்ச்சியடைந்த நிலையில்தான் இருக்கிறது. நாம் உலகில் பிறக்கின்ற போதே கடவுளைவிட்டு பிரிந்தவர்களாக, ஆவிக்குரிய மரண நிலையில்தான் பிறக்கிறோம் (எபே. 2:1-3). வீழ்ச்சிக்கு முந்தைய நிலைமையில் ஆதாம் உயிருள்ளவராக இருந்தார். படைத்தவரோடும், சகல படைப்புகளோடும் நல்ல ஐக்கியமுள்ள நிலையில் அவர் இருந்தார். அவருடைய உள்ளுணர்வுகள் யாவும் வேறு திசையில் இருந்தன. நாம் இப்போது இருப்பது போல சுயநலமுடையவராக அவர் இல்லை. கடவுளின் சாயலைத் தான் தரித்துக் கொண்டவராக இருப்பதை நன்றாக உணர்ந்தவராக இருந்தார். அதன் காரணமாக கடவுளையும், தனது மனைவியையும், தனக்கு உலகத்தில் அளிக்கப்பட்டிருந்த வேலையையும் சந்தோஷத்தோடு ஏற்றுக் கொண்டு வாழ்வது அவருக்கு வெகு இயல்பாக இருந்தது. இவைகளை கஷ்டமாகவோ அல்லது இவைகளிலிருந்து விலகிச் சென்றுவிட வேண்டும் என்கிற எண்ணமோ அவருக்கு ஒருபோதும் ஏற்பட்டிருக்காது. கடவுள் தன்னை இணைத்திருக்கின்ற இந்த இணைப்புகளிலிருந்து விடுவித்துக் கொண்டு தான் தனித்து இயங்க வேண்டும் என்கிற எண்ணம் அவருக்குள் ஏற்பட்டிருக்கவே ஏற்பட்டிருக்காது. பாவக்கறை ஏற்படாத வரையில் மனிதனுக்கு தன்னைக் குறித்த சுயசிந்தனையே இருந்திருக்காது. அவன் மனமெல்லாம், மனைவியோடு ஐக்கியமாக வாழ்வதும், தனக்கு இப்பூலோகத்தில் நியமிக்கப்பட்ட வேலையை செய்வதும், கடவுளைக் குறித்த சிந்தனையும்தான் ஆக்ரமித்திருக்கும். உயிருள்ள இந்த ஐக்கியமான நிலையையெல்லாம் தனித்தனியாக அறுத்துவிட்டு

*தான் தனியாக பிரிந்து இருக்க வேண்டுமென அவன் ஒருபோதும் நினைத்திருக்க மாட்டான். தன்னை ஒரு தனித்த மனிதனாக அவன் கற்பனை செய்துகூட பார்த்திருக்கமாட்டான். தன்னிலிருந்தே பிரிந்து, சற்று தொலைவிலிருந்து தன்னையே ஆராய்ந்து, "ஓ! இதுதான் நானா" என்கிற ஆராய்ச்சியில் மூழ்கியிருக்க மாட்டான். தான், தனது என்கிற சுயநல மனப்பான்மை அவனிடம் அறவே இருந்திருக்காது.*

*பாவத்திற்கு முந்தைய ஆதாம் உயிருள்ளதான ஐக்கிய நிலையைக் கொண்டவராக இருந்தார்: கடவுளோடு ஐக்கியம்! மனுஷியோடு ஐக்கியம்! தனது உழைப்பின் மூலமாக உலகத்தோடு ஐக்கியம்! தனது ஆளுகையின் மூலமாக மிருகஜீவராசிகளோடும் விருட்சங்களோடும் ஐக்கியம்! இந்த இணைப்புகளிலிருந்து அவரைப் பிரிக்கும்படியாக எந்தக் காரியமும் அவரைத் தூண்டியிருக்க முடியாது. தனது காரியங்களை மாத்திரமே யோசிக்கிறதான சுயநலங்கொண்டவராகவோ, சுயபச்சாதாபத்தை ஏற்படுத்திக்கொள்கிறவராகவோ அவர் இருந்திருக்க மாட்டார். அந்த மாதிரியான ஒரு மனப்பான்மை மரணத்தினால்தான் ஏற்படுகிறது. நமது சுயநலமுள்ள மனப்பான்மையே நாம் மரணத்திற்குள்ளாக இருக்கிறோம் என்பதற்கு நல்ல நிரூபணமாய் இருக்கிறது. இப்படியாக, நமது சிந்தனைகளிலும், இவ்வுலகத்திலும் மரணம் ஆட்சி செய்கிறதான ஒரு விழுந்துபோன வாழ்க்கையைத்தான் நாம் இவ்வுலகில் அனுபவித்துக் கொண்டுவருகிறோம். கடவுளுடைய மீட்பின் கிருபை நம் வாழ்வில் பிரவேசிக்காவிட்டால் நாம் செத்த மனிதர்களாக, பிரிந்தவர்களாக, இணைக்கப்படாதவர்களாகத்தான் வாழ்ந்து கொண்டிருப்போம்.*

*பாவத்திற்கு முந்தைய ஆதாமுக்கு, இப்போது நமக்கிருக்கிறவிதமான தன்னுணர்வு இருந்திருக்காது. ஆதாம் அந்தப் பழத்தை சாப்பிட்டவுடன் ஆதாமின்*

*கண்கள் திறக்கப்பட்டன; மரணம் அவனை மேற்கொண்டுவிட்டது. அந்த நிலையிலிருந்து ஆதாம் இப்போது உலகத்தைப் பார்க்கிறான். பயங்கரமான, பரிதாபமான ஓர் உணர்வுக்குள்ளாகிறான். பிரிவையும், ஓர் இணைப்பு துண்டிக்கப்பட்டுவிட்டதையும், தனித்துவிடப்பட்டிருப்பதையும், தனிமையையும் அந்தத் தறுவாயில் உணருகிறான். ஆதி. 2:17ல் தேவன் மனிதனை எச்சரித்திருக்கிறார்: விலக்கப்பட்ட கனியைப் புசிக்கும் நாளிலே நீ சாகவே சாவாய் என்று எச்சரித்திருந்தார். ஆனால் சாத்தானோ, நீங்கள் அதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்கிறதான வாக்கை (ஆதி. 3:5) அளிக்கிறது. ஆகவே அவர்கள் அந்தக் கனியைப் புசித்தார்கள். அப்பொழுது அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்பட்டது (வசனம் 7). சாத்தான் வாக்களித்ததான அந்த “அறிவை” அவர்கள் அடைந்தார்கள். ஆனால் தேவனோ அதை “மரணம்” என்று குறிப்பிடுகிறார். அவர்கள் அந்தப் பழத்தை சாப்பிட்டு, செத்த பிணங்களாக இந்த உலகத்தைப் பார்க்க ஆரம்பிக்கிறார்கள். மரணம் ஆட்கொண்டுவிட்ட ஓர் உலகத்தையே அவர்கள் இப்போது பார்க்கிறார்கள்; ஒன்றோடொன்று இணைந்திருந்த உலகம் இப்போது சகலமும் பிரிந்து போனதான ஓர் உலகமாக அவர்கள் கண்முன் தோற்றமளிக்கிறது. மனிதனின் வீழ்ச்சியில் சகல படைப்புகளுமே உடைந்து போனது. வீழ்ச்சிக்கு முன்னதாக சகலமும் நேர்த்தியாக இணைக்கப்பட்டிருந்தது. மரணம் சகல காரியங்களிலும் ஊடுருவிவிட்டதால், எல்லாவற்றிலும் பிரிவு ஏற்பட்டுவிட்டது.*

## அத்தி இலை மூலமாக எதிர்ப்பு

*பாவம் செய்த உடனேயே மனுஷனும் மனுஷியும் செத்தவர்களைப் போல நடந்துகொள்ளுகிறார்கள்: ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்து போகிறார்கள். பிறகு அவர்கள் அத்தி இலைகளைப் பறிக்கிறார்கள். அதைக்*

கொண்டு அவர்கள் தங்களுக்கென அலங்காரமான ஆபரணங்களையோ, தொப்பிகளையோ, கண்களை மறைக்கும்விதத்தில் கண்ணாடி போன்றவற்றையோ செய்துகொள்ளவில்லை. மாறாக அவர்கள் தங்களுடைய இடுப்புகளுக்கு அரைக்கச்சைகளை உண்டுபண்ணிக் கொண்டார்கள். தங்களை ஒரே மாம்சமாகச் செய்கின்ற சரீரத்தின் அங்கங்களை மறைத்துக் கொண்டார்கள். இருதயத்திலும் ஆத்துமாவிலும் இணைந்திருப்பதை சரீரப்பிரகாரமான நெருக்கம் வெளிப்படுத்துவதா யிருக்கிறது. பாவத்தின் விளைவாக அவர்கள் தங்களுடைய நெருக்கத்தை அழித்துவிட்டார்கள்; தங்களிடையே இருந்த நெருக்கத்தை கொன்றுவிட்டார்கள். தாம்பத்திய அன்பின் சுருக்கமான வெளிப்பாட்டை அத்தியிலையின் கீழ் புதைத்துவிட்டார்கள்.

இப்போது அவர்கள் கடவுளை முழுவதுமாக வெளிப்படுத்துகிறவர்களாய் இல்லை. அவர்களைப் பாருங்கள். அவர்களில் இனி கடவுளைக் காண இயலாது. இருவராயிருந்தாலும் ஒன்றாக இருக்கின்ற ஓர் ஐக்கியத்தை அவர்களிடம் இனி காண முடியாது. அங்கே நீங்கள் பிரிவைப் பார்க்கிறீர்கள், தனிமையைப் பார்க்கிறீர்கள், இணைப்பு துண்டிக்கப்பட்டுப்போன நிலையைப் பார்க்கிறீர்கள். ஆதி. 2:23,24ல் நாம் பார்த்த பூரணமான காட்சி இப்போது கெட்டுப்போய், அவலட்சணமாகத் தோற்றமளிக்கிறது. அந்த பழைய காட்சியில், ஆணும் பெண்ணுமான அவர்கள் இருவரும் நிர்வாணிகளாக இருந்தும் வெட்கப்படாத நிலையில், விவரிக்க முடியாத நெருக்கமுடையவர்களாய், மற்ற படைப்புகளின் மத்தியில் மகிழ்ச்சியாக இருந்ததைக் கண்டோம். இப்போது அவர்கள் அத்தியிலைகளால் தங்களை மூடிக் கொண்டவர்களாக, வெட்கத்தோடு ஒருவரிடமிருந்து ஒருவர் விலகினவர்களாக, கடவுள் தங்களை இணைத்திருந்த சகல படைப்புகளிடமிருந்தும் விலகிக் கொண்டவர்களாகக் காணப்படுகிறார்கள்.

அத்தி இலையை இங்கு கலகத்தின் அடையாளமாகப் பார்க்கிறோம். மனிதனையும், பூமியையும், விருட்சங் களையும் மரணம் பிரித்துவிட்டதற்கான அடையாளத்தை அது காண்பிக்கிறது. கடவுள், மனிதன் உயிர்வாழ்வதற்காக, தாவரங்களை மனிதனுக்கு உணவாக இருக்கும்படிக்குக் கொடுத்திருந்தார். மனிதன் நிலத்தை உழுது பண்படுத்தி பூமியை பராமரிக்கும்படிக்கு நியமிக்கப்பட்டிருந்தான். கடவுளின் கட்டளையையும், நோக்கத்தையும் குலைத்துப் போட்டதற்கு அடையாளமாக அத்தியிலை காணப்படுகிறது. பூமியை பண்படுத்தி, அதை ஆளுகின்ற நியமனத்தை மனிதன் கைவிட்டுவிட்டான் என்பதை அத்தியிலை அறிவிக்கிறதாயிருக்கிறது. கடவுள் தங்களுக்கு உணவாக பயன்படும்படி கொடுத்திருந்த தாவரவகைகளை வேறு நோக்கங்களுக்கு பயன்படுத்துவதின் மூலமாக அவன் தாவரங்களையுங்கூட கடவுளுக்கு விரோதமாகத் திருப்பிவிட்டான்.

கடவுள் தங்களை உருவாக்கியதின் நோக்கத்தை மனிதன் தள்ளிவிட்டதைக் காண்பிக்கிறதான ஓர் அடையாளமாகவும் அந்த அத்தியிலை இருக்கிறது. கடவுள், மனிதனை பல்கிப் பெருகி பூமியை நிரப்பும்படி கூறியிருந்தார். அந்த நோக்கத்தை சிதைக்கும்வண்ணமாக அவர்கள் நடந்து கொண்டார்கள். இதை அவர்கள் நிறைவேற்றாதபடிக்கு தங்களுக்கு அரைக்கச்சைகளை உருவாக்கிக் கொண்டார்கள். ஒரு தாவரத்தை எடுத்தார்கள்; அதை இரண்டாகப் பிரித்தார்கள். அதைக் கொண்டு தங்களுக்கிடையே ஓர் அந்தரங்கமான பிரிவினையை ஏற்படுத்திக் கொண்டார்கள். சொல்லப் போனால், அந்த சம்பவம் அவர்களிடையே விவாகரத்தை ஏற்படுத்தியது போலாயிற்று. தங்களுக்கென சில அந்தரங்கமான நியதிகளை ஏற்படுத்திக் கொண்டு ஒருவரை விட்டு ஒருவர் விலகி நின்றார்கள். கடவுள் ஏற்படுத்தியிருந்த திருமண அமைப்பிலிருந்தும் விலகிப் போனார்கள். அத்தியிலையை கடவுளுக்கு விரோதமான

ஓர் ஆயுதமாக தரித்துக் கொண்டார்கள். கடவுளின் சமூகத்தில் நிற்கமுடியாமல், கடவுளுக்கும் தங்களுக்கும் இடையே அத்தியிலையை தடுப்பாக வைத்துக் கொண்டு ஒளிந்திருக்கிறார்கள். குளிர்ச்சியான வேளையிலே கடவுள், வழக்கம் போல தோட்டத்தில் உலாவ வருகையிலே, அவர்கள் இருவரும் ஓடிச் சென்று மரங்களின் பின்னாலே ஒளிந்துகொள்ளுகிறார்கள். படைப்பையே, படைத்தவருக்கு முன்பாக ஒரு தடுப்பாக உபயோகிக்கிறார்கள். கடவுளுடைய நாமம் மகிமைப்படும்படியாக அந்த மரங்களையும் அவர்கள் உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதற்காக அவர் அவைகளை மனிதனுக்குக் கொடுத்திருந்தார். ஆனால், அதற்கு மாறாக அவர்கள் அந்த மரங்களையே தங்களுக்கும் கடவுளுக்கும் இடையேயான ஒரு தடுப்புச் சுவராக பயன்படுத்தினார்கள்; அதனால் அவரை எதிர்க்கிறவர்களாகக் காணப்பட்டார்கள்.

கடவுளின் ஆரம்ப திட்டத்தின்படி, கடவுள் மனிதனுக்கு அதிகாரியாகவும், மனிதன் தன் துணை யோடு சேர்ந்து படைக்கப்பட்ட சகல தாவரங்களையும் மிருகங்களையும் ஆளும்படியாகவும் உலகை அமைத்திருந்தார். இத்திட்டத்தில் சாத்தானுக்கு அவர் இடங்கொடுக்கவில்லை. ஆனால், இப்போதோ எல்லாமே தலைகீழாயிற்று; அவர் அமைத்த ஒழுங்கு சீர்குலைந்து போயிற்று. சாத்தான் ஒரு மிருகத்தை தனது சேவைக்கு இழுத்துக் கொண்டது; மனுஷியை வஞ்சிக்க ஒரு மரத்தை பயன்படுத்தி, அவளை மனுஷனுடைய ஐக்கியத்திலிருந்து பிரித்து, அவளை தன்னுடைய இடத்தைவிட்டு நிலைபெயர வைத்தது. மனிதனும் இப்போது சாத்தானுடைய பொய்யை நம்புகிறவனாக ஆகிவிட்டான். கடவுளுடைய உதவியில்லாமலேயே, தெய்வீக நிலையை அடைந்து தேவதூதர்களைப் போல ஆகிவிடலாம் என்ற வஞ்சக வார்த்தைகளை ஏற்றுக்கொள்கிறான். கடவுள் இணைத்து அமைத்திருந்த காரியங்கள் யாவும் துண்டுதுண்டாக

*சிதறிப் போய்விட்டன. அது வெட்கத்தையும், துக்கத்தையும் உண்டுபண்ணுகிறதாயிற்று. ஆதாம் ஒரு செடியின் மறைவிலும், ஏவாள் மற்றொரு புதரின் மறைவிலும் தங்களை ஒளித்துக் கொண்டிருப்பதை நான் என் மனக்கண்களால் காண்கிறேன். இருவரும் ஒருவரையொருவர் பார்க்கக்கூட வெட்கப்பட்டுக் கொண்டு விலகி இருக்கிறார்கள். தங்களை உருவாக்கியவரும், பிதாவும், நியாயாதிபதியுமான கடவுளின் எல்லாம் அறிந்த தன்மையை மறந்தவர்களாக, தங்களுடைய நிலைமையைக் குறித்தான சிந்தனையிலேயே அவர்கள் வெகுவாக மூழ்கி, தங்களை ஒளித்துக்கொள்ள வீணாக பிரயாசப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அத்தியிலை மூலமாக அவர்கள் தெரிவித்த எதிர்ப்பையும், நம்முடைய நிலையையும் நாம் பார்க்க வேண்டும்.*

## தெய்வீக நீதி !

*கடவுள் மூன்று பிரதான குற்றவாளிகளையும் தமக்கு முன்பாக நிறுத்தி, அவர்களின் பொறுப்பாளியாகிய ஆதாமை விசாரிக்கிறார்: நம்முடைய ஆதிப்பிதா கூறுகின்ற விளக்கத்தை ஆதி. 3:12ல் பாருங்கள். அதற்கு ஆதாம்: என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள். நான் புசித்தேன் என்றான். இதைக் கேட்கிற நமக்கு, "பாவம் ஆதாம். அவனை மாட்ட வைத்துவிட்டார்களே. எங்கிருந்தோ வந்த அந்த தந்திரமான சர்ப்பம் அவனை தன் வலைக்குள் விழ வைத்துவிட்டதே, அவன் என்ன செய்வான்!" என்று ஆதாமின் மீது பரிதபிக்கத் தோன்றும். பாவத்திற்கும் வீழ்ச்சிக்கும் சாத்தான்தான் ஆதிகாரணமானவன் என்பதை நாம் ஆணித்தரமாக கூறத்தான் வேண்டும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், இதில் ஆதாமின் அக்கிரம செய்கையும் இருக்கிறது என்பதை மறைக்கக்கூடாது. 12ம் வசனத்தில் ஆதாம் சொல்வதை மறுபடியும் கவனியுங்கள். அவனுடைய*

கரம் யாரைக் குற்றப்படுத்துகிறது என்பதை பாருங்கள். என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த (கடவுளைப் பார்த்து ஒரு கரத்தை நீட்டி) ஸ்திரீயானவள் (மறுகரத்தை மனுஷியின் பக்கம் நீட்டி) அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள்.

ஸ்திரீயானவள் . . . எனக்குக் கொடுத்தாள். இதற்குத்தான் அடுத்தவர் மீது பழி போடுவது என்று பெயர். ஆதாம் விவாகரத்துப் பெறும் முயற்சியில் இருக்கிறான். அவளிடமிருந்து தன்னை விலக்கிக் கொண்டவனாக, அதிகாரிகளின் முன்னால் நின்று கொண்டு, "எனக்குத் தெரியாது. அவளைக் குறித்து இனிமேல் நான் பொறுப்பேற்கப் போவதில்லை. அவள் என் மனைவியல்ல. அங்கே நிற்கிற அந்த ஜந்து, யாரோ ஒரு மனுஷியாகும்" என்கிற தோரணையில் விளக்கம் கொடுக்கிறான். ஆதாம் அவளுக்கு மரித்தவனானான்; அவளையும் மரித்தவளாகக் காண்கிறான். "நீர் மரணதண்டனை அளிக்கப் போகிறீரா தேவனே! அதோ, அந்த மனுஷிதான்! இதினிமித்தமாக யாராவது மரணமடைய வேண்டுமானால் அதை அவளுக்குத்தான் கொடுக்க வேண்டும். அது மாத்திரமல்ல. அவளை எனக்குக் கொடுத்ததே நீர்தான் என்பதையும் சிந்தித்துப் பாரும். ஆகவே இவை யாவும் நடந்ததற்கு உம்மைத்தான் குற்றப்படுத்த வேண்டும்."

என்ன துணிகரமான அக்கிரம பேச்சு! ஆதாம் ஆழமான மரணகுழிக்குள்ளாக விழுந்துவிட்டான். கடவுளிடமிருந்தும், அவருடைய நோக்கங்களிலுருந்தும் மிகவும் தள்ளிப் போய்விட்டது மாத்திரமல்லாமல், தான் செய்த பாவத்திற்கு கடவுளையே காரணங்காட்டி குற்றப்படுத்தும் அளவுக்கு அவன் அவருக்கே விரோதமாக செயல்படுகிறான். தான் செய்த பாவத்திற்கு மற்றவர்களைக் குற்றப்படுத்திய பிறகு, போனால் போகிறதென்று, நான் புசித்தேன் என்று தான் செய்ததையும் பட்டும்படாமலும்

அறிவித்துக்கொள்ளுகிறான். மனுஷியும் அதேவிதமாக குற்றத்தை அடுத்தவர் மீது சுமத்தியபிறகு, தான் புசித்ததையும் அறிவித்துக்கொள்ளுகிறாள். ஆனால் அவள் ஒரு காரியத்தை சரியாக சொல்லுகிறாள். வஞ்சனைக்கு காரணமான சர்ப்பத்தை கடவுளிடம் காண்பித்துக் கொடுக்கிறாள். இதை ஆதாம் குறிப்பிடவில்லை. ஆதாம் தன் பேச்சின் மூலமாக தன்னை சாத்தானுடைய குணங்களைக் கொண்டவனாகக் காண்பிக்கிறானேயொழிய, தேவசாயலை அவன் பிரதிபலிக்கிறவனாக காணப்படவில்லை. கடவுள், அவ்விருவரையும், சாத்தானையும், அதன் தூதர்களையும் சேர்த்து அப்போதே அக்கினிக்கடலில் தள்ளியிருந்திருப்பாரேயானால் சட்டத்தின்படி அவர் ஒரு சிறந்த நியாயாதிபதியாக இருந்திருப்பார். அவர்கள் இருவரும் தங்களை கடவுளோடு நெருங்கிய சம்பந்தம் உள்ளவர்களாக எண்ணுவதைவிட சாத்தானோடு உறவு வைத்துக்கொள்வதில் அதிக ஆர்வமுடையவர்களாகக் காணப்படுகிறார்கள். கடவுளுடைய உண்மையான வார்த்தைகளின் மீது நம்பிக்கை வைப்பதைவிட சாத்தானின் பொய்பேச்சுகளில் அதிகமான நம்பிக்கை வைக்கிறார்கள். பாவம் செய்துவிட்டு எப்படியாவது தப்பித்துவிடலாம் என்று நம்புகிறார்களேயொழிய அதன்காரணமாக மரிக்கத்தான் வேண்டும் என்கிற வார்த்தைகளை நம்பவில்லை. தாங்கள் வேறுவிதமான நம்பிக்கை வைக்கும்படி தங்களுக்கென கடவுள்களை ஏற்படுத்திக் கொண்டு, பொய்களை நம்புகிறார்கள். பாவம் உருவானதின் காரணமாகத்தான் அவர்கள் தங்களை நிர்வாணிகளாக உணர்ந்து, அத்தியிலைகளைக் கொண்டு தங்களிடையே மரணபிரிவினையை ஏற்படுத்திக் கொண்டார்கள். அவர்கள் தங்கள் குற்றத்தை அரைகுறையாகத்தான் ஒப்புக்கொள்கிறார்கள். இருந்தாலும் அவர்களின் குற்றத்திற்குக் கொடுக்கப்பட வேண்டிய தண்டனையை கொடுத்தே ஆவது கடவுளின் நீதியான நியாயத்தீர்ப்பு.

## தெய்வீகக் கிருபை!

*ஆனால் கடவுள் அந்தத் தோட்டத்திற்குள்ளே வந்து அந்த தம்பதிகளை அழைத்தது அவர்களை அழித்துப் போடுவதற்காக அல்ல, அவர்களைக் காப்பாற்றவே! தான் எவ்வளவு இரக்கமுள்ளவர் என்பதை அவர் அங்கு அவர்களுக்கு வெளிப்படுத்தினார். படைப்பு முற்றிலும் அழிந்துவிடாமல் பார்த்துக் கொண்டார். தான் முன்னால் திட்டமிட்டபிரகாரமே, மனிதனுக்கும் மனுஷிக்கும் கொடுத்த வேலையை அவர் எடுத்துப்போடாமல் அதை நிலைக்கச் செய்தார். ஆனால் கடவுள் கூறியிருந்தபிரகாரமே மரணம் அங்கு பிரவேசித்துவிட்டது. நாம் நம்மையே ஏமாற்றிக்கொள்ளுகிறவர்களாக இருக்கக் கூடாது. மனிதன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். மனிதன் கீழ்ப்படியாமல், விலக்கப்பட்ட பழத்தைத் தின்றான். பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன் (ரோமர் 6:23). விழுந்து போன மனுக்குலத்திற்கு தேவனுடைய இலவசமான கிருபைவரம் அளிக்கப்பட்டிருக்கிறது. பாவக்குற்றமுடையவனாகவும், மரணத்தில் அமிழ்ந்திப் போனவனாகவும், சாத்தானால் வஞ்சிக்கப்பட்டவனாகவும் அவன் காணப்படுகிறான்.*

*ஆதி. 3:15-16ல் தேவன் மனுஷியிடம் பேசின கிருபையுள்ள வார்த்தைகளை கவனியுங்கள்: உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன். அவர் உன் தலையை நசுக்குவார். நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார். அவர் ஸ்திரீயை நோக்கி: நீ கர்ப்பவதியாயிருக்கும்போது உன் வேதனையை மிகவும் பெருகப் பண்ணுவேன். வேதனையோடே பிள்ளை பெறுவாய். உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும். அவன் உன்னை ஆண்டுகொள்ளுவான் என்றார். கடவுள் அந்த இக்கட்டான சூழ்நிலையில்*

தலையிடுகிறார். மரணத்தினிமித்தமாக படைப்பு அழிந்துபோய்விடாதபடிக்கும், பாவத்திற்குரிய தண்டனையை பெற்று மனிதகுலம் அழிந்துவிடாத படிக்கும் ஒரு திட்டத்தோடு அச்சூழலில் குறுக்கிடுகிறார். ஸ்திரீயானவள் சாத்தான் சொற்கேட்டு, அதற்கு உடன்பட்டு, சாத்தானோடு ஐக்கியமாகிவிட்டபோதிலும், அந்த ஐக்கியத்தை தேவன் அறுத்துவிடுகிறார். அவள் இனி தொடர்ந்து சாத்தானோடு சேர்ந்துவிடாதபடிக்கு, மனிதனோடுள்ள ஐக்கியத்தில் அவள் தொடர்ந்து இருக்கும்படிக்கு தேவன் மீண்டும் அவர்கள் உறவை வலுப்படுத்துகிறார். முதல் பிரசங்கியாக, கடவுள், தானே, வரப்போகிற மேசியாவைக் குறித்து, ஆதாம் ஏவாள் முன்னிலையிலேயே சாத்தானுக்கு தீர்க்கதரிசனமாக அறிவிக்கிறார். கடவுள், மனிதனையும் மனுஷியையும் அழிவிலிருந்து காப்பாற்றி, அவர்களுக்கு நியமித்திருந்த வேலையை பறித்துவிடாமல் அதை தொடர்ந்து செய்ய அனுமதிக்கிறார். விழுந்துபோன மனுக்குலத்திற்கு ஒரு நற்செய்தியையும் அவ்விடத்தில் அறிவித்தார். மனுஷி, தொடர்ந்து மனைவியாகவும் தாயாகவும் இருப்பதற்கு தேவன் அநுக்கிரகம் அளித்தார். அதே போல மனிதனும் உலகத்தில் பண்படுத்துகிறவனாகவும், பெயரிடுகிறவனாகவும் தன் பணியை தொடர்ந்து செய்வதற்கு அனுமதித்தார்.

இருந்தாலும், மரணம் உலகத்தில் பிரவேசித்ததின் நிமித்தமாக, அது மனிதனுடைய தொழிலிலும், ஸ்திரீயின் கர்ப்பகாலத்திலும் பாதிப்புகளை ஏற்படுத்தியது. கடவுள் மனிதனுக்கு நியமித்த வேலையை அவன் தொடர்ந்து செய்வான். ஆனாலும் அவன் அதில் கஷ்டங்களையும், ஏமாற்றங்களையும் சந்திக்க வேண்டியதாயிருக்கும். அதே போல மனுஷியும் அவளுக்கு நியமித்த காரியமாகிய தாய்மைப் பொறுப்பை அவர் தொடர்ந்து அளித்தாலும், அதில் அவள் வேதனையை சந்திக்க வேண்டியதாயிருக்கும் என்று கடவுள் கூறுகிறார்.

*மனிதனின் வருத்தத்தைக் குறிக்க அவர் பயன்படுத்திய அதே வார்த்தையை மனுஷியின் வேதனையைக் குறிக்கவும் பயன்படுத்தியிருக்கிறார். பெண்ணுக்கு பிரசவசமயத்தில் பிரசவவலி ஏற்படுகிறது. போகப்போக வலி கூடிக்கொண்டே போகிறது. வலிகளுக்கிடையில் அவள் என்னத்தை எதிர்பார்க்கிறாள்? இன்னும் அதிகமதிகமான வலியே தொடர்ந்து ஏற்படுகிறது. இதே போல மனிதனும் தனது வேலையின் நிமித்தமாக அநேக வருத்தங்களை தொடர்ந்து சந்திக்க வேண்டியதாயிருக்கிறது. வருத்தத்தின்மேல் வருத்தமே அவனுக்கு மிஞ்சுகிறது. கர்ப்பகாலத்தில் பெண் வேதனையை அனுபவிக்கிறாள். பூமியில் வேலை செய்கிற மனிதன், வருத்தத்தையே அனுபவிக்கிறான். எபிரெய மொழியில் எழுதப்பட்ட ஒரே வார்த்தையை, வேதனை என்றும் வருத்தம் என்றும் நமது மொழியில் மொழிபெயர்த்திருக்கிறார்கள். வேதனையின் பலனாக அவள் என்னத்தை அடைகிறாள்? ஒன்றுமேயில்லை. பாவத்தில் விழுந்துவிட்ட உலகத்தில் ஏமாற்றங்களையே அனுபவிக்க வேண்டியதாயிருக்கிறது.*

*பாவத்தில் விழுந்து, மரணத்தின் காரணமாகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தபோதிலும், கடவுள் நம்மை ஆணாகவும் பெண்ணாகவும் தொடர்ந்து நிலைநிற்கச் செய்து, நமக்கு நியமித்த பணிகளையும் தொடர்ந்து செய்வதற்கு அனுமதித்திருக்கிறார். பாவத்தில் விழுந்த பின்னும் ஆதாமுக்கு பெயரிடுகிற நியமனம் மாறவில்லை. ஆதி. 3:20ல் ஆதாம் தன் மனைவிக்கு ஏவாள் என்று பெயரிடுகிறான். மனுஷி என்கிற அவளுடைய பெயரை ஏவாள் என்று மாற்றுகிறான். அவள் ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவள் என்பது அதற்கு அர்த்தமாம். சர்ப்பத்தின் தலையை நசுக்கப் போகிற ஒருவரை அவள் பெறுவாள் என்கிற கடவுளின் வாக்குத்தத்தத்தை அவன் நம்புகிறான். ஆகவே அவன் மனுஷி என்கிற அவளுடைய பெயரை*

*மாற்றி ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாய் என்கிற நம்பிக்கையின் பெயரைக் கொடுக்கிறான். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட அவர் வந்து சாத்தானின் தலையை நசுக்கி, அனைவருக்கும் ஜீவனைக் கொடுப்பார்- அவர் மூலமாக மரணம் ஒழிந்து மீண்டுமாக உலகில் ஜீவன் தலைதூக்கும் என்பதை அவன் விசுவாசித்தவனாக அவளுக்கு ஏவாள் என்று பெயரிடுகிறான். ஏவாளின் மூலமாக ஒருவர் வருவார். அவர் ஜீவனை அளிக்கிறவராக வந்து, சாத்தானின் செயல்களையெல்லாம் அழித்துப் போடுவார். ஆதி. 3:21ல் பிதாவாகிய கடவுளே, தகுதியற்ற இந்த பாவிகளுக்கு சில வேலைகளை செய்து கொடுப்பதைப் பார்க்கிறோம். ஜீவனுள்ள இன்னொரு படைப்பின் இரத்தத்தை சிந்தி, அதன் மூலமாக இவர்களின் பாவக்கறையை மூடுகிறார். அவர்களுடைய பாவத்தின் காரணமாக ஏற்பட்ட கறையை மூடுவதற்காக தேவன் அவர்களுக்கு ஒரு தோல் ஆடையை தயாரித்ததின் மூலமாக பாவநிவாரணபலியாகிய ஒரு புதிய திட்டம் ஆரம்பமாகிறது. தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து உலகத்தில் மனிதனாக வந்து தன்னையே பரிகார பலியாக கொடுக்கும் சமயத்தில் அந்த திட்டம் முற்றிலுமாக முற்றுப் பெறுகிறது. அவருடைய பரிகாரபலி, ஒரு குறைவுமற்றதும், பூரணமானதும், கடைசியானதுமாகும். பாவத்தில் விழுந்து போன தம்பதிகளை கடவுள் ஏதேன் தோட்டத்திலிருந்து துரத்திவிட்டார். கடவுளின் வாசஸ்தலமாக, அவர் பிரசன்னத்தையுடைய ஆலயமாக இருந்த அந்த இடத்திலிருந்து அவர்கள் துரத்தப்பட்டனர். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட அந்த வித்து வந்து, தன்னையே பரிகாரபலியாக செலுத்தி, சர்ப்பத்தின் தலையை நசுக்கி வெற்றி சிறக்குமட்டாக மனிதனுக்கும் தேவனுக்கும் இடைய நீக்க முடியாத ஒரு பெரும் பிளவு ஏற்பட்டுவிட்டது. இயேசு கிறிஸ்துவின் மூலமாகத்தான் மனிதனுக்கு நித்திய ஜீவனுக்குள் பிரவேசித்து, பிதாவினுடைய இளைப்பாறுதலில் பங்கடையக்கூடிய சிலாக்கியம் கிடைக்கும். நாம்*

*ஆதாமை மோட்சத்தில் சந்திப்போமா? சந்திப்போம் என்றுதான் நான் நினைக்கிறேன். ஏனென்றால், மீண்டும் இரட்சிப்பு மனுக்குலத்துக்கு கிடைக்கும் என்கிற விசுவாசத்தினால்தான் ஆதாம் ஸ்திரீயின் பெயரை மாற்றி அவளுக்கு, ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாய் என்கிற அர்த்தமுடைய பெயரைக் கொடுக்கிறான். அவனும் பாவத்தில் விழுந்து போனவன்தான். ஆனாலும் கடவுளின் வாக்குத்தத்தமாகிய வித்தை (இயேசு கிறிஸ்துவை) விசுவாசித்தான். பரலோகத்தில் இருக்கிறவர்கள் யாவருமே, இயேசு கிறிஸ்துவின் மூலமாக தேவன் தங்களுக்கு கிருபையாக அளித்த இரட்சிப்பை விசுவாசித்தவர்களாகவே இருப்பார்கள்.*

## அதிகமதிகமாக வழிவிலகுதல்!

*மோசே, மனிதனின் சரித்திரத்தை விவரிக்கையில் ஏவாளை, ஆதாமின் மனைவியாகவே விஸ்தரிக்கிறார். வீழ்ச்சிக்கு முன்பாக மனுஷனும் மனுஷியும் திருமணம் ஆனவர்களாகவே காணப்பட்டார்கள் (ஆதி. 2:25). மனுஷன் தலைமைப் பொறுப்பை வகிக்கிறவனாக இருந்தான் (ஆதி. 2:23). அவர்கள் பாவத்தில் விழுந்த நேரத்திலும் அவர்களை கணவன் மனைவியாகவே விவரிக்கிறார் (ஆதி. 3:20). ஆதி. 3:9ல் ஆதாமை தேவன் அழைத்து விசாரிப்பதின் மூலமாக அவனுடைய தலைமைப் பொறுப்பு வெளிப்படுகிறது. பாவத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு, அவர்கள் அத்தியிலைகளைக் கொண்டு தங்களை ஒருவரிடமிருந்து ஒருவர் பிரித்துக் கொண்ட போதிலும், மோசே அவர்களுடைய உறவை கணவன்-மனைவியாகவே குறிப்பிடுகிறார் (ஆதி. 3:16,17,20,21). மனுக்குலத்திற்கு விதிக்கப்பட்ட தண்டனையும் ஆதாமை பிரதிநிதியாக வைத்தே அளிக்கப்படுகிறது. அவனுடைய தலைமைப் பொறுப்பு அகற்றப்படவில்லை. ஆகவேதான் அவன் வீழ்ச்சிக்குப் பிறகும்கூட பெயர் வைக்கிற தகுதியை உடையவனாக*

ஸ்திரீக்கு ஏவாள் என்று பெயரிடுகிறான். பொய்களும், எதிர்ப்பும், மரணமும் அங்கு தலைவிரித்தாடிய போதும், தேவன் தாம் படைப்பை படைத்ததின் நோக்கத்தை மாற்றவில்லை. ஆனால் பாவத்தின் காரணமாக சகல படைப்புகளும் மரணத்திற்குள்ளாகி விட்டது. திருமணமும் மரணத்தினால் தீண்டப்பட்டுவிட்டது. அதன்காரணமாக, கடவுளின் சாயலாக உருவாக்கப்பட்ட தம்பதிகளிடையே இருக்க வேண்டிய ஐக்கியம் அழிந்து போகிறதான பயங்கர நிலை உருவாகிவிட்டது . . . உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும். அவன் உன்னை ஆண்டுகொள்ளுவான் என்று ஆதி. 3:16ல் வாசிக்கிறோம். பாவம் வாசற்படியில் படுத்திருக்கும். அவன் ஆசை உன்னைப் பற்றியிருக்கும். நீ அவனை ஆண்டுகொள்ளுவாய் என்று ஆதி. 4:7ல் படிக்கிறோம். இந்த இரண்டு வாக்கியங்களையும் மூலபாஷையாகிய எபிரெய மொழியில் பார்க்கும்போது இரண்டும் ஒரேவிதமான இலக்கணத்தைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. ஆதி. 3:16ல் மோசே, பாவத்திற்கு பின்னாக திருமண வாழ்வில் ஏற்பட்ட ஒரு குழப்பமான நிலையை விவரிக்கிறார். திருமண ஐக்கியத்தை கடவுள் நீக்கிப்போடவில்லை; அவரவருக்கு நியமித்த வேலைகளையும் நீக்கிவிடவில்லை என்பதை அவ்வசனம் மூலமாக நாம் அறிந்து கொண்டாலும், திருமண பந்தத்திலும் மரணம் ஒருவிதமாக பிரவேசித்துவிட்டது. இப்போது அதில் துயரங்களும் ஏமாற்றங்களும் நுழைந்துவிட்டது. மரணம் நுழைந்ததின் காரணமாக, ஒருமையை பிரதிபலிக்க வேண்டிய தம்பதியரிடையே போட்டிகளும், பூசல்களும், மாறுபட்ட கருத்துகளும், சண்டைசச்சரவுகளும் ஏற்படலாயிற்று. யாருக்கு தலைமைப் பொறுப்பு என்பதைக் குறித்து அபிப்ராய பேதங்கள் தோன்றலாயின. இந்த காரியம்தான் இப்போதும் திருமண தம்பதிகளாகிய நம்மையும் பாதிப்பதாக இருக்கிறது: திருமண வாழ்க்கையில் யார் தலைமைப் பொறுப்பு எடுத்து நடத்துவது? இப்படியான

வழிவிலகுதல்கள் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே போகிறதை நாம் நமது வாழ்க்கை முறைகளில் அனுபவிக் கிறோமல்லவா!

ஸ்திரீயை படைப்பதற்கு முன்னதாகவே, கடவுள் ஆதாமுக்கு தலைமை வகிக்கும் பொறுப்பை கொடுத் திருந்தார். பாவம் செய்ததின் தண்டனையாகத்தான், கடவுள், ஆதாமை பெண்ணின்மீது அதிகாரியாக வைத்தார் என்று சில வேத மாணாக்கர்கள் கூறுவதுண்டு. அது பாவத்திற்கு பிற்பாடு விதிக்கப்பட்ட நிலைமை என அவர்கள் நினைப்பார்கள். ஆணுக்குக் கொடுக்கப்பட்ட தலைமைப் பொறுப்பை, பெண்ணுக்கு கடவுளால் அளிக்கப்பட்ட தண்டனையாக எண்ணுவதற்கு இடமில்லை. படைப்பில், ஆணுக்கு அளிக்கப்பட்ட தலைமைப் பொறுப்பு, கடவுளாலேயே தெய்வீகமானதாக ஏற்படுத்தப்பட்டதால் பெண்ணுக்கு அது ஓர் ஆசீர்வாதமான நிலையேயாகும். ஜீவராசிகளுக்கு பெயரிட்டு, அவைகளை ஆண்டுகொள்வதின் மூலமாக ஆதாம் தனது தலைமைப் பொறுப்பை நிறைவேற்றினான். கடவுள் முதன்முதலாக ஸ்திரீயை அவனிடம் அழைத்துக் கொண்டு வந்த போதும், அவன் வெகு இயல்பாக தன் தலைமை வகிக்கும் குணத்தை செயல்படுத்தினான். அவள் தன் எலும்பில் எலும்பு என்பதை சொல்லாமலேயே உணர்ந்துகொள்கிறான். அவளை போஷித்து பாதுகாக்க வேண்டிய பொறுப்பு தனக்கு இருக்கிறதென்பதையும் அறிந்துகொள்கிறான். அவன் வாயிலிருந்து இயல்பாக வந்த வார்த்தைகள் அவனுடைய தலைமை வகிக்கும் குணத்தை காண்பிக்கிறது. பாவத்திற்கு முன்னதாக ஆதாமின் வாயிலிருந்து வந்த வார்த்தைகள் மூலமாக கடவுளின் சாயல் அவனில் பிரதிபலிப்பதை நாம் காண்கிறோம். ஆனால் சாத்தான் அவனுடைய தலைமை வகிக்கும் குணத்தையும், கடவுளின் சாயலை பிரதிபலிப்பதையுமே குறி வைத்து அடித்து விட்டான். ஆதாம் பெண்ணை தனிமைப்படுத்திவிட்டான்;

*கடவுளையே எதிர்கேள்வி கேட்கிறவனாகிறான். பெண்ணின் மீதும், கடவுளின் வார்த்தைகளின் மீதும் அவனுக்குக் கொடுக்கப்பட்டிருந்த நிர்வாகப் பொறுப்பை, கடவுள், இந்த உலகத்திலும் தொடர்ந்து அளித்திருக்கிறார். ஆனால், அழியாமல் விட்டுவைக்கப்பட்டிருக்கிற இந்த உலகமும் பாவத்தினால் வீழ்ச்சியடைந்த உலகம்தான். கடவுள், பிரிந்து நின்ற ஆதிப் பெற்றோரை மீண்டுமாக ஒன்று சேர்த்தார். ஆனால் அவர்களுடைய திருமணபந்தமோ மிகவும் எளிதில் உடைந்துபோகக்கூடியதாகவும், சேதப்படக்கூடியதாகவும், பாவம் மரணம் என்பவைகளால் பாதிப்படையக்கூடியதாகவும் ஆகிவிட்டது.*

*இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற உலகம் கடவுளால் ஏற்படுத்தப்பட்டது; ஆனால் மரணத்தினால் பாதிப்புக்குள்ளானது; அது, கடவுளின் கிருபையினால் அழியாமல் பாதுகாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. கடவுள் இன்றும் படைப்பில் நியமித்த மாதிரியான திருமணபந்தத்தையே கட்டளையிட்டிருக்கிறார். ஆனால் இந்த பாவ உலகில் நாம் வெகு சுலபமாக அந்த நியமனத்தை மீறக்கூடியவர்களாக இருக்கிறோம். பாவத்தினால் பாதிப்பிற்குள்ளான இரண்டு பாவிகள் திருமணம் செய்கிறார்கள். பாவத்தினால் மரண நிலைமைக்குள்ளாகிவிட்டபடியால் அது தங்களைப் பிரித்துவிடாதபடிக்கு கஷ்டப்பட்டு போராடிக் கொண்டிருக்கிறார்கள். நெருக்கமான ஐக்கியம் இல்லாத அந்த உறவில் கடவுளின் திரித்துவ தத்துவம் அரைகுறையாகத்தான் வெளிப்படுகிறது. யார் தலைமை தாங்குவது, யாருக்கு என்ன உரிமை இருக்கிறது, நீயா-நானா, எனது-உனது போன்ற காரியங்களே திருமணபந்தத்தை பலவீனப்படுத்துவதாயிருக்கிறது. வேதத்திற்குப் புறம்பானதாகவும், வெறுமனே அதிகாரம் மாத்திரம் செலுத்துவது என்றும் வரும்போது திருமண உறவே தலைகீழாகி கோணலாகிப் போய்விடுகிறது. தவறுதலான வழிகளில் தலைமை வகிக்க முயற்சிக்கும்போது*

அது திருமணத்தின் நோக்கத்தையே திசை திருப்பி விடுகிறது.

இரண்டுவிதமான விபரீதங்கள் திருமண வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கிறது. இவைகளை நான் “உச்சகட்ட விபரீதம்” என்றும் “தலைகீழ் விபரீதம்” என்றும் குறிப்பிட விரும்புகிறேன். இந்த உச்சகட்ட விபரீதத்தில், ஆண் தனது தலைமைப் பொறுப்பை மிதமிஞ்சி எடுப்பவனாகவும், பெண் தனது கீழ்ப்படிகிற கட்டளையை தவறுதலாக அளவுக்கதிகமாக கடைப்பிடிப்பவளாகவும் காணப்படுகிறது. அவன் தனது தலைமைப் பொறுப்பை ஒரு சர்வாதிகாரியைப் போல செயல்படுத்தப் பார்க்கிறான். அவளோ தன்னையே அழித்துக்கொள்ளும் அளவுக்கு கீழ்ப்படியப் பார்க்கிறாள். ஆண் தன்னை சகலத்தையும் ஆளுகிறவனாக நினைக்கிறான்; பெண் தன்னை ஒன்றுமேயில்லாதவளாக கருதுகிறாள். அவன் தன்னுடைய பெலத்தைப் பிரயோகித்து அவளை அடக்கி ஒடுக்கி ஆளப்பார்க்கிறான். அவளோ அந்த ஆளுகையில் தனது பெண்மைக்குரிய குணநலன்களையுங்கூட இழந்து வெறும் மண்ணைப் போல இருக்கிறாள். இந்த மாதிரியான உச்சகட்ட விபரீதங்களை நாம் கீழை நாட்டு திருமணங்களில் காணலாம். அங்கு புருஷர்கள் ஒரு கொடுங்கோல் அரசனைப் போன்று தங்கள் மனைவிகளை அரட்டி, மிரட்டி ஆளுவதைக் காணலாம். சிலபேர் தங்கள் மனைவிகளை அடிப்பதுங்கூட உண்டு. அங்கு புருஷர்களுக்கு அளவுக்கதிகமான அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. அவன் அதை தன் இஷ்டம் போல பிரயோகிக்கிறான். அன்போ அல்லது கணக்குக் கொடுக்க வேண்டும் என்கிற பொறுப்புணர்ச்சியோ இல்லாது தன் அதிகாரத்தை தன் சுயஇஷ்டத்தின்படி மனைவி மீது காட்டுகிறான். மனைவியும் தன்னை மிகவும் கீழானவளாக எண்ணிக்கொள்ளுகிறாள். அவள் தனக்கென சுய விருப்பு வெறுப்பு எதுவுமில்லாத ஒரு பிணத்தைப் போன்ற வாழ்க்கையை நடத்துகிறாள்.

அவனுக்கு முன்பாக தான் எதுவுமேயில்லை என்கிற திரையைப் போட்டுக் கொண்டு தன்னையே அதின் பின்னால் ஒளித்துக்கொள்கிறாள்.

இதற்கு நேர்மாறாக திருமண வாழ்க்கையின் அர்த்தத்தையே மறுபுறமாகத் மாற்றி அமைப்பதையே நான் “தலைகீழ் விபரீதம்” என்று குறிப்பிடுகிறேன். இங்கு கணவன் தனது தலைமைப் பொறுப்பை கைவிட்டு விடுகிறான். மனைவி அதை அபகரித்துக்கொள்ளுகிறாள். இது, மேலை நாட்டு திருமண வாழ்க்கையில் சர்வ சாதாரணமாகக் காணப்படும் தவறான காரியமாகும். திருமணத்தில் ஆண், பெண்ணுக்குரிய கடமைகளை மாற்றினோமானால் அது கடவுள் நியமித்த வாழ்க்கை யாகாது. ஒரு பெண்ணே குடும்பத்தில் பெற்றோராகி, இருவரது ஸ்தானத்தையும் வகிப்பது போலாகிவிடும். பெண் குடும்பத்தில் வீட்டுக் காரியங்களை கவனித்து அவைகளை நடத்துவதால் அவள் அதை ஒரு தாயின் ஸ்தானத்திலிருந்து நடத்துகிறவளாயிருக்கிறாள். தலைமைப் பொறுப்பு எடுக்காத கணவனை, அவள், ஒரு தாய் தன் முதிர்ச்சியடையாத மகனைப் பராமரிப்பது போல வழிநடத்த வேண்டியதாகிறது. சிறுவனைப் போல அவன் தன் மனைவியிடம் அனுமதி வேண்டி நிற்கிறான். அப்போது அவளும் ஓர் அதிகாரியைப் போல செயல்பட வேண்டியதாயிருக்கிறது. அதன் மூலமாக அவள் ஆளுகை செய்யும் அதிகாரத்தை அடைகிறாள். இந்த ஏற்பாடு அவர்களுக்கிடையே வசதியாக இருப்பதுபோலத்தான் தோன்றுகிறது. ஆனால் முடிவில் அத்தகைய திருமண வாழ்க்கை மதிப்பை இழந்துவிடுகிறது. தான் ஒரு முதிர்ச்சியடைந்த ஆணை திருமணம் செய்யவில்லை, ஒரு வளர்ந்த பையனைத்தான் திருமணம் செய்திருக்கிறோம் என்கிற ஆத்திரம் அவளுக்கு பிற்பாடு ஏற்படுகிறது. அவனுக்கும், தன்னை அவள் ஓர் ஆணாக மதிக்க மாட்டேனென்கிறாளே என்கிற ஆதங்கம் மேலிடுகிறது.

உண்மையில் சொல்லப்போனால் அவன்தான் இன்னும் சரியான ஆணாக நடந்துகொள்ளவில்லை.

அவரவருக்கு கடவுள் விதித்த அலுவல்களை நாம் மாற்றும்போது, நாம் திருமணத்திற்குள்ளாக மரணத்தை கொண்டுவருகிறவர்களாக இருக்கிறோம். அதனால் நெருங்கிய ஐக்கியம் மரித்துப் போகிறது. நமது திருமண வாழ்வின் மூலமாக கடவுளை மகிமைப்படுத்த வேண்டிய தும் செத்துவிடுகிறது. இந்த மாதிரியான உருக்குலைந்த திருமண வாழ்க்கையில் பாவம் நிலைகொள்ளுகிறது. பாவம், நெருங்கிய ஐக்கியம் ஏற்படவிடாமல் தடுக்கிறது. இந்த பாவத்தை சுவிசேஷத்தின் மூலமாக ஏற்படும் அன்பினால் மேற்கொள்ள வேண்டும். அதுவே நமது மீட்பின் கோட்பாடாகும். அதை நாம் இப்போது நான்காவது வழிகாட்டும் நட்சத்திர குறிப்பு மூலமாக விளங்கிக்கொள்ளப் போகிறோம்.

# அத்தியாயம் 4

## மீட்பின் கோட்பாடு தாம்பத்திய உறவின் நெருக்கத்திற்கு வழிகாட்டுகின்றது

### திருமண உறவின் மூலமாக சுவிசேஷத்தை அறிவித்தல்!

மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள். கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான். அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார். ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும். புருஷர்களே, உங்கள்

*மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு, தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார். அப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்த சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூர வேண்டும்; தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில்தான் அன்புகூருகிறான். தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லையே; கர்த்தர் சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறதுபோல ஒவ்வொருவனும் தன் மாம்சத்தைப் போஷித்துக் காப்பாற்றுகிறான். நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம். இதினிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தன் தாயையும்விட்டு, தன் மனைவியுடன் இசைந்து, இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். இந்த இரகசியம் பெரியது; நான் கிறிஸ்துவைப்பற்றியும் சபையைப் பற்றியும் சொல்லுகிறேன். எப்படியும், உங்களிலும் அவனவன் தன்னிடத்தில் அன்புகூருவதுபோல, தன் மனைவியினிடத்திலும் அன்புகூரக் கடவன்; மனைவி யும் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக்கடவள் (எபே 5:22-33).*

*சுவிசேஷத்தின் பிரகாரமான திருமணத்தைக் குறித்து நாம் விளக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. நமது திருமணம், கிறிஸ்துவுக்கும் சபைக்குமுள்ள உறவை சுட்டிக் காண்பிப்பதாயிருக்க வேண்டும். நமது திருமணத்தில் "சுவிசேஷத்தின்படியான அன்பை" வெளிப்படுத்துகிறவர்களாய் இருக்க வேண்டும். மீட்பின் திட்டத்திற்கேற்ப நமது திருமணத்தை மாற்றி அமைக்க*

வேண்டும். இயேசு தன் மணவாட்டியின்பேரில் கொண்ட அன்பே மீட்பின் அன்பாகும். அவர் தம் மணவாட்டியை மிகவும் நேசித்தார். ஆகவே அதற்காகத் தம்மையே ஒப்புக்கொடுத்தார். தம் மணவாட்டியை கறைதிரை ஒன்றுமில்லாமல் பரிசுத்தமாக்க சித்தம் கொண்டார். வசனத்தைக் கொண்டு மணவாட்டியை சுத்தப்படுத்தி, தமக்கு முன்பாக மகிமையானதும் பிழையற்றதுமாக நிறுத்திக்கொள்வதற்காக தம்மையே அதற்காக அர்ப்பணித்தார். இந்தவிதமான அன்பு எப்பேர்பட்டதாயிருக்கிறது! உலகத்தில் பாவக்கறை படிவதற்கு முன்னதாக வாழ்ந்த முதலாவது தம்பதியின் பரிசுத்தமான அன்பை புதிய ஏற்பாட்டின் மூலமாக அப்போஸ்தலர் நமக்கு சுட்டிக் காண்பிக்கிறார். கிறிஸ்தவ திருமணம் எப்படி இருக்க வேண்டும் என்பதை எபே. 5:31ல் எடுத்துக் கூறுகின்ற பவுல் அப்போஸ்தலன் அதற்கு இணையான வசனமாக ஆதி. 2:24ஐ மேற்கோள் காட்டி விளக்குகிறார். ஆதியாகமம் 2ம் அதிகாரத்தை நாம் திரும்பிப் பார்க்கின்ற அதே வேளையிலே நாம் நமக்காக வைக்கப்பட்டிருக்கிற எதிர்காலத்தையும் நோக்குகிறவர்களாய் இருக்கிறோம். ஆரம்ப காலங்களை நாம் பார்க்கிறோம். அதே வேளையிலே சபை மீட்பையும் காண்கிறோம். பாவமற்றதாக ஆக்கப்பட்ட சபையானது, மணவாட்டியாக இரண்டாம் ஆதாமாகிய கிறிஸ்துவுக்கு அளிக்கப்படவிருப்பதையும் உணருகிறோம். ஆதியாகமம் 2ம் அதிகாரத்தைப் பார்க்கிற வேளையிலேயே கடவுள் தம்முடைய மக்களுக்காக ஏற்படுத்தி வைத்திருந்த மீட்பின் திட்டத்தையும் காண்கிறோம். ஆரம்பத்தைப் பார்த்து முடிவையும் தெரிந்துகொள்ளுகிறோம். மீட்பின் நோக்கத்தோடுதான் கடவுள் மனிதனைப் படைத்திருக்கிறார் என்பது விளங்குகிறது. தேவன், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே . . . எல்லாவற்றையும் படைத்தார் . . . என்று பவுல் எபே. 3:9,10ல் குறிப்பிடுகிறார். கடவுளின் அநாதி தீர்மானமாகிய

*மீட்பின் திட்டம், படைப்பின் ஆரம்பநிலையிலேயே தெரிகிறது. பாவமில்லாத நிலையில் பரிசுத்தமான அன்பை வெளிப்படுத்திய அந்த ஆதிப் பெற்றோர்தான் கிறிஸ்துவுக்கும் சபைக்குமுள்ள பரிசுத்த ஐக்கிய நிலைக்கு உவமையாக காணப்படுகிறார்கள். பவுல் இந்த இரகசியம் பெரியது என்று குறிப்பிடுகிறார். இந்த இரகசியத்தைதான் கிறிஸ்தவர்களாகிய நாம் நமது திருமண வாழ்க்கையின் மூலமாக காண்பிக்க வேண்டும்.*

## மகிமையை அறிவிக்கும் அடையாளக் குறிப்பு!

*சுவிசேஷத்தின் மூலமாக விளக்கப்பட்டுள்ள திருமணமே, கடவுள் ஆதியிலே மனிதன் பாவத்திற்கு முன்னதாக வாழ்ந்த திருமண வாழ்க்கைக்கு ஒத்ததாக இருக்கிறது. அவர் ஆரம்பத்தில் ஏற்படுத்தி, பிற்பாடு பாவத்தின் காரணமாக அழிந்துபோன திருமண வாழ்க்கையை அவர் சுவிசேஷத்தின் மூலம் மீண்டுமாக காப்பாற்றுகிறார். சுவிசேஷத்தைக் கொண்டு அந்த திருமண வாழ்க்கையை மீட்க சித்தங்கொண்டார். இரண்டு கிறிஸ்தவர்கள் திருமணம் செய்துகொள்ளும்போது அவர்கள் திருமண உறவைக் குறித்து கடவுள் ஏற்படுத்தியிருக்கிற கட்டளைகளுக்கு கீழ்ப்படிகிறார்கள். புது படைப்புகளாக அவர்கள் திருமண வாழ்க்கையை நடத்துகையில் திருமணத்தை அவர்கள் மேன்மைப்படுத்துகிறவர்களாய் விளங்குகிறார்கள். உயிரோடெழுந்த இயேசு கிறிஸ்துவின் ஜீவனைக் கொண்டும், பரிசுத்த ஆவியானவரின் உதவியினாலும் திருமண உறவை பூரணப்படுத்துகிறார்கள். இயேசு கிறிஸ்துவின் மூலமாக தேவன் அவர்களுக்கிடையே அன்பை பெருகப்பண்ணுகிறார்; அதை அவர்கள் சுவிசேஷத்தின் மூலமாக விளங்கிக்கொள்ளுகிறார்கள். இந்த "சுவிசேஷ அன்பை" அவர்கள் ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்ளுகிறார்கள். பரிசுத்த ஆவியானவரின் உதவியினாலும் சுவிசேஷத்தின் மூலமாகவும் அவர்கள்*

*திருமண ஐக்கியத்திற்கு கேடு விளைவிக்கக்கூடிய பாவங்களை மேற்கொள்ளுகிறார்கள்.*

*அத்தகைய சுவிசேஷ அன்பை அடைந்த தம்பதிகளாக நாம் ஆதி. 2:24ஐ பார்க்கும்போது, நம்முடைய எதிர் காலத்துக்கு வைக்கப்பட்டுள்ள மீட்பின் நிச்சயம் விளங்குகிறது. நமது மீட்பரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவை மகிமைப்படுத்துவதற்கு நமது திருமணமும் ஒரு சாதனமாக அமைகிறது. நமது திருமணம் படைப்பின் ஒழுங்கை காண்பிப்பதோடு மாத்திரமல்லாமல், இரட்சிப்பைக் குறித்த நம்பிக்கையையும் வெளிப்படுத்துவதாய் இருக்கிறது. நமது திருமணத்தின் மூலமாக கடவுளின் படைப்பின் நோக்கம் பிரதிபலிக்கப்படுகிறது. இயேசு தமது சகல மகிமையோடும் தமது சபையை சந்திக்க ஆவலோடு வருவார் என்கிறதான காரியத்தை நமது திருமண வாழ்க்கை பிரதிபலிக்கிறது. அவர் மூலமாகவே நாம் யாவரும் படைக்கப்பட்டு, அவராலேயே நாம் மீட்கப்பட்டும் இருக்கிறோம். நமது திருமண வாழ்க்கையை அவர் ஏற்படுத்திய சித்தத்தின்படி செய்யும்போது அதை நமது சொந்த முயற்சியினால் அல்ல, உயிரோடெழுந்த இயேசு கிறிஸ்துவின் வல்லமையினாலும் ஜீவனினாலுமே அதை நடத்துகிறோம். நாம் ஒருவரிலொருவர் சுவிசேஷ அன்பினைக் காட்டும்போது, கிறிஸ்து பாவத்தையும் மரணத்தையும் தமது மணவாட்டியினிமித்தமாக வென்றதை காண்பிக்கிறவர்களாக இருக்கிறோம். அத்தோடுகூட வரப்போகின்ற காலத்தை "தீர்க்க தரிசனமாக" நமது திருமண வாழ்வின் மூலமாக அறிவிக் கிறவர்களாகவும் இருக்கிறோம்.*

*கிறிஸ்து, சபையாகிய தமது மணவாட்டியை சந்திக்க வரப்போவதை ஒவ்வொரு கிறிஸ்தவ திருமணமும் காண்பிப்பதாய் இருக்கிறது. அதை யோவான் அப்போஸ்தலன் தனது தரிசனத்தில் கண்டதை*

நாம் வெளிப்படுத்தின விசேஷத்தில் வாசிக்கிறோம்: பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்து போயின; சமுத்திரமும் இல்லாமற் போயிற்று. யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தை தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கி வரக்கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல் ஆயத்த மாக்கப்பட்டிருந்தது. மேலும் பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ் தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார் (வெளி. 21:1-3).

மணப்பெண் தயாராகிவிட்டாள். திருமண ஒப்பந்தம் பூர்த்தியாயிற்று. சதாகாலமும் கடவுளோடு நிலைத்திருக்கக்கூடிய பரிசுத்த ஐக்கிய நிலையும் ஆரம்ப மாகிவிட்டது. இதையே யோவான் தீர்க்கதரிசனமாக காண்கிறார். திருமணத்தில் காணப்படும் நேர்மையான உடன்படிக்கையும், சுவிசேஷ அன்பும் கடவுளுக்கு மகிமையைக் கொண்டுவருகின்ற இரண்டு முக்கிய குறிப்புகளாகும். நமது திருமணத்தை, கடவுள் ஆதியில் ஏற்படுத்தின திட்டத்தின்படி நாம் வாழும்போது நமது படைத்தவருடைய சொல்லொணா மகிமையை அதன் மூலமாக காண்பிக்கிறவர்களாக இருக்கிறோம். சுவிசேஷ அன்பை நமது திருமணத்தில் நாம் செயல்படுத்தும்போது, கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்துகிறோம். பாவிகளாகிய நமக்காக, கிறிஸ்துவின் மூலமாக கடவுள் காண்பித்த கிருபையை தெரியப்படுத்துகிறவர்களாய் இருக்கிறோம். அத்தோடு, நமது திருமணம், மகிமையானதொரு எதிர்காலம் வரவிருப்பதையும் சுட்டிக் காண்பிப்பதாய் இருக்கிறது. படைப்பின் தத்துவம் என்கிற உறுதியான

பாறையின்மீது அமைக்கப்பட்டுள்ள கிறிஸ்தவ திருமண வாழ்க்கை, திரித்துவ கடவுளின் மகிமையான ஒன்றுபட்ட நிலையையும் பிரதிபலிப்பதாய் இருக்கிறது. சுவிசேஷத்தின் வெற்றி, கிறிஸ்தவ திருமணங்களிலும் ஊடுருவியுள்ளது. அத்தகைய திருமணங்கள், கிறிஸ்துவின் மூலமாக கடவுள் பேரிலுள்ள பற்றை வெளிப்படுத்துவதாய் இருக்கிறது. வரப்போகின்ற காலத்திலே, பரலோகத்திலே, கிறிஸ்துவின் பூரணப்பட்ட அன்பை சபையானது பெறவிருப்பதை கிறிஸ்தவ திருமணங்கள் சுட்டிக்காண்பிக்கிறது. இவை யாவும் திருமணத்தில் காணப்படும் மகிமையான காரியங்கள் இல்லையா?

மனோதத்துவ நிபுணர்களும், மருத்துவர்களும், சமூகநலவாதிகளும், அரசியல்வாதிகளும் தங்களுக்குத் தெரிந்த வகையில் திருமணத்தைக் குறித்து ஆராய்ந்து அதை மனிதனின் கோணத்திலிருந்து பார்க்கிறவர்களாக இருக்கிறார்கள். நாமோ, கடவுளின் ஜனங்களாக, அவரிடமிருந்து கற்றுக்கொள்கிறவர்களாக, கடவுளையே மையமாகக் கொண்டு திருமணத்தை காண்போம். நமது திருமணத்தின் மூலமாக கடவுளை மகிமைப்படுத்துவதையே நமது நோக்கமாகக்கொள்ளுவோம். நமக்காக அல்ல, கடவுளின் மகிமையை வெளிப்படுத்துகிறவர்களாக நாம் வாழ முயற்சிக்கும்போதுதான் நாம் உயிர்வாழ்வதின் காரணமே நமக்குப் புலப்படும். உங்கள் திருமண வாழ்க்கையின் மூலமாகக் கடவுளை மகிமைப்படுத்துங்கள். அப்போது கடவுளின் சாயலை அடைகின்ற உணர்வைப் பெறுவீர்கள், கர்த்தரால் மீட்கப்பட்டவர்களாகவும் உணர்வீர்கள்.

சகோதரனே, உங்கள் மனைவியின் கரத்தை பற்றிக் கொள்ளுங்கள்! சகோதரியே, உங்கள் கணவனின் கரத்தைப் பிடித்துக்கொள்ளுங்கள். படைப்பின் சிகரமாகிய நீங்கள் இருவரும் சேர்ந்து நில்லுங்கள். நீங்கள் இருவருமாக சேர்ந்துதான் கடவுளின் வியக்கத்தகு

*சாயலை பிரதிபலிக்கிறீர்கள். இருவருமாக சேர்ந்து, உங்கள் வாழ்க்கையின் அஸ்திபாரமாகிய ஆதி. 2:24ம் வசனத்தின் மேல் உறுதியாக நில்லுங்கள். கிறிஸ்துவுக்குள் இணைக்கப்பட்டவர்களாக நில்லுங்கள். நீங்கள் ஒரே மாம்சமாக மேலும் மேலும் முயற்சி செய்கையில் நீங்கள் விரும்புகிற மேன்மையும் கடவுளை மகிமைப்படுத்துகிறதான கம்பீரமும் உங்களை வந்தடையும். சுவிசேஷமானது எப்படி பாவத்தையும் மரணத்தையும் மேற்கொண்டு வெற்றி சிறந்தது என்பதை நீங்கள் உங்கள் திருமண வாழ்க்கையின் மூலமாக உலகிற்கு அறிவிக்கிறவர்களாக வாழலாம். இயேசு கிறிஸ்துவின் வருகையைக் குறித்த நம்பிக்கையையும், பரலோகத்தில் வைக்கப்பட்டுள்ள மகிமையான எதிர்காலத்தையும் மற்றவர்களுக்கு வெளிப்படுத்துகின்ற அடையாளக்குறிப்புகளாக நீங்கள் இருவரும் இணைந்து செயல்படலாம்.*

*மேற்கூறிய நான்கு நட்சத்திர வழிகாட்டிகளையும் கொண்டு உங்கள் வாழ்க்கைப் பயணத்தைத் தொடருங்கள். கடவுளை மகிமைப்படுத்துங்கள். கடவுளின் படைப்பின் இரகசியத்தை வெளிப்படுத்துங்கள். பாவத்தை மேற்கொள்ளுங்கள். வரப்போகின்ற காலத்தைக் குறிக்கின்ற நற்செய்தியை உங்கள் வாழ்க்கையின் மூலமாக பிரதிபலியுங்கள். இந்த பயணத்தைத் தொடங்குவது நல்லதே. அது, விவாகத்தில் நெருங்கிய ஐக்கியத்தை நோக்கிய பயணம்!*